# செல்லாக்காசின் அரசியல்

அருண் நெடுஞ்செழியன்

கம்யூனிஸ்ட் கட்சி(மாலெ)
மக்கள் விடுதலை

**செல்லாக்காசின் அரசியல்** •
அருண் நெடுஞ்செழியன் • முதல் பதிப்பு: டிசம்பர் 2016 • பக்கங்கள்: 64 • வெளியீடு: கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ)-மக்கள் விடுதலை, எண்: 6, எழுபது அடி சாலை, சுப்புப்பிள்ளைத் தோட்டம், தி.நகர், சென்னை 600001 | 9042274271 | வடிவமைப்பு: ஆதி

**ரூ.40**

## முன்னுரை

“செல்லாக்காசின் அரசியல்” என்கிற இந்நூல், தோழர் அருண் நெடுஞ்செழியனின் சிறப்பான ஆக்கங்களில் ஒன்றாக நமது வாசிப்பிற்கு வந்து சேர்ந்திருக்கின்றது. சமகால அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி தமிழ் எழுத்து உலகத்தில் நூல்களின் வருகை மிக சொற்பமே! அவ்வகையில் இந்நூலாக்க முயற்சி பெரிதும் வரவேற்கப்படவேண்டியதாகும்.

இலக்கிய உலகில், எந்திரம் போல எழுதிக் குவிக்கின்ற எழுத்தாளர் ‘ஜெம்‘கள் திடீர் பொருளியியல் வல்லுனர்களாக மாறி, மோடி ஆதரவு கருத்து தயாரிப்பை மேற்கொள்கையில், ஆர்.எஸ்.எஸ் எழுத்தாளர் குருமூர்த்தி தொடங்கி, நாளுக்கொரு திசைமாறி அடிக்கின்ற ‘புரட்சிப் புயல்’ வரை, பல்வேறு முகாம்களிலிருந்து மத்தியத்தர வர்க்கத்தின் மோடி ஆதரவுக் கருத்தை வலுப்படுத்துகின்ற வலதுசாரி ஆதரவுப் பிரச்சாரத்தை மேற்கொள்கையில், நமது எழுத்துப்பணி முன்பைவிட அவசிய மானதாக மாறியிருக்கிறது. அவ்வகையில், நடப்பு விவரங்களை கருத்தூன்றி கவனித்து, தரவுகளைச் சேகரித்து, மார்க்சியப் பொருளியல் விமர்சனக் கண்ணோட்டத்தோடு ஆய்ந்து, நமக்கான அரசியல் கையேட்டை அளித்துள்ள தோழர் அருண் நெடுஞ்செழியனின் எழுத்துப் பணி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நவம்பர் 8 நள்ளிரவில், இந்திய மக்கள்மீது மோடி நடத்திய ‘செல்லாப் பணம்’ என்ற சர்ஜிகல் ஸ்ட்ரைக் (துல்லியத்

தாக்குதல்) என்பது, இந்திய மக்களின் முறைசாராத (Informal Economy), அன்றாட வாழ்க்கையில் இருந்துகொண்டிருக்கிற சிறுகுறு நடுத்தர பொருளாதார தொழில் வணிக அமைப்பை, பேரழிவுக்கு வழிநடத்துவதாகும். கள்ளப் பணம், கருப்புப் பணம் வைத்திருக்கும் சக்திகளின் மீதான தாக்குதலாக அறிவித்துவிட்டு, உண்மையில் பெருந்திரளான மக்களின் நடப்பு பொருளாதார முறைகளின் மீதுதான் தாக்குதலை நடத்தினார். கடந்த ஒரு மாத காலமாக எதிர்க்கட்சிகளின் குரலுக்கு, பாராளுமன்றமுறையை மதித்து விவாதத்தை சந்திக்காமல், பொதுக் கூட்டங்களில் தினம் ஒரு அறிவிப்பை மேற்கொண்டு வருகிறார் பிரதமர். கருப்புப்பணம் என ஊழல் அதிகார கும்பலுக்கு எதிராகவும் கள்ளப்பணம் என பாகிஸ்தானின் பொருளாதார சீர்குலைவுக்கு எதிராகவும் போராடும் தேசியவாத வளர்ச்சி நாயகனாக தனது பிம்பத்தை கட்டமைத்துக்கொண்டு, அவசரகால ஆட்சிமுறையை ஒத்த நள்ளிரவு அறிவிப்பை வெளியிட்டார். இதை உடனடியாக இந்தியப் பெருமுதலாளிகள் சங்கமும் (CII) வலதுசாரி வல்லுனர் களும் வரவேற்றுள்ளார்கள். ஓட்டுப் போட்ட நடுத்தர வர்க்கம் மோடியின் வளர்ச்சி மாயையில் பலியாகிக் கிடக்கிறது. ஊழல் அரசியல்வாதிகள் மீதான அடித்தட்டு மக்களின் வெறுப்பையும் மூலதனமாக மாற்ற முயற்சிக்கிறார்கள். போலி மாய பிம்பத்தில் கட்டப்பட்ட உணர்வெழுச்சி அப்படியே நீடிக்கப் போவதில்லை. மக்கள் சந்தித்த துன்ப துயரங்களால் தேசியவாத வளர்ச்சி உணர்வெழுச்சி வடிந்துபோகும் நாள் வெகுதொலைவில் இல்லை. இப்பொழுதே உச்சகதியில் இருந்த சுருதி குறைந்து அபஸ்வரமாக கேட்கத் தொடங்கிவிட்டது. வங்கியில் ஒப்படைக்கப்பட வேண்டிய செல்லாப் பணம் 15 லட்சம் கோடியில், 13 லட்சம் கோடி ஒப்படைக்கப்பட்டதாக ரிசர்வ் வங்கி கூறுகிறது. இன்னும் இருபது நாட்கள் இருக்கின்றன. கருப்புப் பணம் எங்கே என மோடி நாட்டு மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். கருப்புப் பணம், கள்ளப் பணம் பற்றிய சுருதியை குறைத்துக் கொண்ட மோடியின் பரிவாரம், இப்பொழுதுகாகித பணமற்ற பொருளாதாரத்திற்கு (Cashless Economy) மக்கள் மாறவேண்டும் என வேறொரு குரலில் பேசத் தொடங்கியிருக்கிறது. இதுநாள் வரை, கைப்பற்றப்படாத கருப்புப் பணத்திற்காக மக்கள் படுகின்ற துயரத்திற்கு யார் பொறுப்பு?

சென்னை மக்கள் புயலில் சந்தித்த துயரத்தோடு, கால்கடுக்க ஏ.டி.எம். வாசல்களில் மணிக்கணக்கிலும் மைல் கணக்கிலும்

நின்றார்களே, அப்பொழுது காகிதமற்ற பணப் பொருளாதாரம் பல்லிளிக்கவில்லையா? எல்லாத் தகவல் தொடர்புகளும் அறுந்துபோக, ஏ.டி.எம்.களும் மூடிப் போக, கார்டுகளை உரசி மக்கள் ஓய்ந்து போகவில்லையா? மோடி சொல்கின்ற நல்லகாலம் வருவதற்குள் மக்கள் இறந்துபோவார்கள் என மன்மோகன் சிங் எச்சரித்தது, உண்மையாக மாறுகின்ற காலம் வெகு தொலைவில் இல்லை. ஏனென்றால் ஏற்கனவே வங்கிகளில் காத்துக்கிடந்து மடிந்த 60க்கு மேற்பட்ட மக்களுக்கு துயரத்தை சந்திக்கச் சொல்லியே பாலை ஊற்றிவிட்டவர்தான் திருவாளர் மோடி.

கள்ளப்பணம், கருப்புப்பணம், காகிதமாற்ற பொருளா தாரம், அடுத்து என்ன சொல்லப் போகிறார்கள்? திருவாய் மலர்ந்திருக்கிறார் ஆடிட்டர் குருமூர்த்தி. துயரங்களை சந்திக்கவேண்டும் என சொன்ன மோடி, ஜெட்லிக்கு எல்லாம் ஒருபடி மேலே போய், “மக்கள் கையில் பணம் இருந்தால் தேவையற்றதையெல்லாம் வாங்கிக் குவிப்பார் கள், ஊதாரித்தனமாக செலவிடுவார்கள். ஆகவே புழக்கத்தில் உள்ள ரொக்கப் பணத்தை (Liquid cash) வங்கிகள் திரும்பப் பெற்று தனது இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும், அதுதான் சரியான பொருளாதாரம்” எனக் கூறியிருக் கின்றார். இந்தியக்குடும்ப அமைப்பின் சேமிப்பு முறைதான், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நம்மை காப்பாற்றுகிறது என 2008 அமெரிக்கப் பொருளாதார நெருக்கடி மற்றும் 2013ஆம் ஆண்டு இந்தியப் பொருளாதார சரிவின்போது கூறிய குருமூர்த்தி, தற்போது இந்திய மக்கள் நுகர்வு வெறியர்கள் என குறிப்பிடுகிறார். ஆக, மக்களிடம் கையிருப்பாக (Deposit) வாங்கிய செல்லாப் பணத்தை, உடனடியாக திருப்பிக் கொடுக்கவேண்டிய தேவையில்லை என்பதை மறைமுகமாக குறிப்பிடுகின்றார். ஆக, இவர்களின் உண்மையாக நோக்கமென்ன? ஏன்வெளிப் படையாக சொல்ல மறுக்கிறார்கள்?

கள்ளப் பணம், கருப்புப் பணம் என்பதுமத்திய அரசு கொடுத்த புள்ளிவிவரத்தின்படியே ரொக்க ரூபாய் பணத்தில் மிகச் சிறு சதவீதம்தான். ஆக, இந்நடவடிக்கையை நியாயப்படுத்த, ஊதிப்பெருக்கப்பட்ட ஒரு காரணம் மட்டும்தான். முழு உண்மை அதிலில்லை. மாறாக மக்கள் பெருந்திரளானவர்கள் மத்தியில் காகிதப் பணமோ ரொக்கப் பணமோ கையிருப்பில் இருக்கக் கூடாது என்பதுதான் இந்த ‘செல்லாப் பணம்’ என்கிற நிதிச்சேவை சீர்த்திருத்த நடவடிக்கைகளுக்கு முதன்மையான காரணமாகும்.

தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வணிகர்கள், முறைசாரா தொழிலாளர்கள், சேவைத் துறை ஊழியர்கள், தொழில்முறை நிபுணர்கள் (Proffessionals), சிறுகுறு நடுத்தர தொழில்முனைவோர் என அனைத்து துறை தொழிலாளர்கள், ஊழியர்கள், வல்லுனர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் பெருமூலதனத்தின், வங்கி மூலதனத்தின், நிதிமூலதனத்தின் ஏகபோக ஆட்சிக்கு கீழ் கொண்டுவருவதற்கான தீவிர சீர்திருத்தம்தான் இந்த துன்பகரமான நிதித்துறை நடவடிக்கை. ரூ 2.5 லட்சத்திற்கு மேல் வைத்திருக்கின்ற ஒட்டுமொத்த மக்களையும், திருடர்களாகவும் பதுக்கல்காரர்களாகவும், குற்றவாளிகளாகவும் சித்தரித்துவிட்டு, ஏகபோக சக்திகளுக்கு நிதிச்சேவையை ஒழுங்குபடுத்தி கொடுப்பதுதான், இந்நடவடிக்கையின் நோக்கமாக இருக்கிறது.

அந்நிய உள்நாட்டு ஏகபோகங்களுக்கு ஆதரவாக, வாராக் கடன் தள்ளுபடி, வரிச்சலுகை, முதலீடுகளுக்காகக் கட்டுப்பாடு களைத் தளர்த்துதல், மொரிஷியஸ், சிங்கப்பூர் வழியாக வருகின்ற கருப்புப் பண முதலீடுகளுக்கு (Participatory Note) ஆதரவாக இருத்தல் என நாட்டின் பொருளாதார மற்றும் நிதித்துறை சீர்திருத்தங்களை ஏற்கனவே விரைவுபடுத்திவிட்டார்கள். இதன் அடுத்த கட்டமாகத்தான் GST வரி விதிப்பு மாற்றம், வங்கிகளை இணைத்தல், ரொக்கப் பணத்தை கட்டுப்படுத்துதல் என நடவடிக்கைகள் தீவிரம் பெறுகின்றன.

நிதிமூலதனத்தை மையப்படுத்துதல், தங்கு தடையற்ற வகையில் ஏகபோகங்கள் உதித்தெழுதல், சர்வதேச நிதி மூலதனத்தோடு இணைந்து நிதி மூலதன ஏற்றுமதியில் ஈடுபடுதல், பிராந்திய செல்வாக்கைப் பெறுதல் என்பதுதான் இக்காலப்பகுதியின் பொருளாதார நடவடிக்கையின் குறிப்பிடத் தக்க பண்பாகும். இதனொரு பகுதியாக நடைபெற்ற தீர்மான கரமான நடவடிக்கை தான், ஒட்டுமொத்த மக்களின் ரொக்கப் பணத்தையும் சூறையாடி, செல்லாப் பணமாக அறிவித்து, வங்கி பரிவர்தனைக்குள் ஈர்த்து, நிதி மூலதனத்தை மையப்படுத்தக் கூடிய நடவடிக்கையாகும்.

இந்நடவடிக்கைகள் முழுமை பெறவேண்டுமென்றால், மத்திய அரசை நோக்கி அதிகாரம் குவிக்கப்படவேண்டும், அதிலும் பாராளுமன்றம் போன்ற பிரதிநிதித்துவ நிறுவனங் களைத் தாண்டி, சிலரின்கையில், குறிப்பாக வலதுசாரி சக்தி களின் கையில் அதிகாரம் குவிக்கப்படவேண்டும். அதை நோக்கிதான் நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த அச்சுறுத்தலை முறியடிக்க வேண்டுமென்றால், நாட்டில் ஜனநாயக சக்திகள் பலப்படவேண்டும். அதற்கு நாட்டின் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துவருவதும், தேசபக்தி வேடம் பூண்டுள்ள பாசிஸ்டுகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதும் அவசியமாகிறது. அதற்கான அரசியல் பொருளாதார கையேடாக, விரிவான அலசலோடு இந்நூலை தோழர் அருண் நெடுஞ்செழியன் நமக்கு வழங்கியுள்ளார். இதைப் படிப்போம். மக்களிடம் பரப்புவோம். வலதுசாரி சக்திகளை முறியடித்து, ஜனநாயகத்தைக் காத்து நிற்போம்.

நன்றி

**தோழர் பாலன்**
பொதுச்செயலாளர்
CPML—மக்கள் விடுதலை
*16.12.2016*
திருச்சி

நவம்பர், 8ஆம் தேதி நள்ளிரவு முதல் 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற மோடியின் மோசடி அறிவிப்பானது, நாட்டின் ஒட்டுமொத்த ஏழை எளிய, நடுத்தர வர்க்கத்தினர் மீது போரைத் தொடுத்திருக்கிறது. உலக மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவில், சுமார் 95 விழுக்காடு மக்கள் ரொக்கப் பணத்தையே அன்றாடத் தேவைக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் கள்ளப் பணம் ஒழிப்பு, கருப்பு பண மீட்பு போன்ற பெயரிலான ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பானது நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலையை ஏற்படுத்தி யுள்ளது.

குறைவான கால அவகாசத்தில், மருத்துவம், போக்குவரத்து, உணவுபோன்ற அன்றாட அத்தியாவசியத் தேவைக்கான பணம் இல்லாமல் மக்கள் பெரும் கொடுமைக்கும் இன்னலுக்கும் உள்ளாகி வருகின்றனர். குற்றவாளிகள் போல முத்திரை குத்தப்பட்டவர்களானார்கள். செல்லாத பணத்தை மாற்றுவதற்கான மாற்று ஏற்பாட்டை – முன்தயாரிப்பை இந்த அரசாங்கம், திட்டமிட்டு செய்யாத காரணத்தால், பெரும் குழப்பமும், வங்கிகளிலும், ஏடிஎம்களிலும் மக்கள் மணிக்கணக்கில் உணவு, தண்ணீரின்றி வரிசையில் காத்துக் கிடக்கிற அவல நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இத்தகையப் பொருளாதார அவசர நிலைக்கு பச்சிளம் குழந்தைகள், முதியவர்கள் உட்பட இதுவரை எழுபதிற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர்.

குறு, சிறு வியாபாரங்கள், விவசாயப் பணிகள், கட்டுமானத் தொழில்கள், லாரிப் போக்குவரத்து, மீன்பிடித் தொழில்போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுவரும் உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்க்கை ஒட்டுமொத்தமாக முடக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கையால் நாட்டில் மக்கள் திரள் போராட்டங்களும் கலவரங்களும் வெடிக்கிற ஆபத்துள்ளது என உச்சநீதிமன்றமே கண்டிக்கிற நிலைக்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. ஆளும் பாசிச மோடி அரசும் அவர்களின் அடிவருடிகளும் இந்த நடவடிக்கையைக் கருப்பு பண மீட்பிற்கும், கள்ளப் பண ஒழிப்பிற்குமான சாதனையாக சாதித்துவருகின்றனர்.

# ரூபாய் நோட்டு மாற்றமே கருப்பு பண மீட்பல்ல:

*ஒரு பொருளின், சரக்கின், கருத்தளவிலான மதிப்பின் தெரிவிப்பே பணம்.*[1]

1. மோடியின் அறிவிப்பின் ஊடாக பணத்தின் மதிப்பு மீதான புரிதலை இன்றைய சூழலில் புரிந்துகொள்வது அவசியமாகிறது. இன்றைய முதலாளித்துவ அமைப்பில் தேவைகளை நிறைவு செய்கிற பொருட்களை/சரக்குகளை வாங்குவதற்கு "பணம்" என்கிற சாதனம் எவ்வாறு முன்னுக்கு வந்தது? பணத்தின் மதிப்பின் (ஐம்பது காசு முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை) வாயிலாக பொருளின் மதிப்பு (குண்டூசி முதல் வைடூரியம் வரை) எவ்வாறு தெரிவிக்கப்படுகிறது என்ற சிக்கலான ஆய்வை முதன் முதலாக ஆராய்ந்து அறிவித்தவர் கார்ல் மார்க்ஸ் மட்டுமே. முதலாளிய அறிஞர்கள்கூட பணத்தின் மதிப்பு குறித்த வரலாற்றுரீதியான வளர்ச்சிகளை, அதன் பண்புகளை விளக்கியது இல்லை.

   ஓர் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பை வழங்குவது, அதில் செலவிடப்பட்டுள்ள மனித உழைப்பின் கால அளவால் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு சட்டையை தைக்க இரண்டு நாள் உழைப்பை (சராசரி எட்டு மணி நேரம்) செலுத்தவேண்டும் என்று வைத்துக்கொள்வோம், அதே இரண்டு நாளில் நான்கு துணிப்பையை தைக்க முடிகிறதென்றால், ஒரு சட்டைக்கு நான்கு துணிப்பை சமமாகிறது. அதாவது பொருளின் மதிப்பு சமூகமயமாக்கப்பட்ட உழைப்பின் ஊடாக தன்னை தெரிவிக்கிறது. இரண்டு பொருட்கள் இருக்கும் வரை சிக்கல் இல்லை. பல பொருட்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படுகிற சூழலில், இடைத்தரகனாக, பொதுப் பரிமாற்ற சமதை சாதனமாக "தங்கம்" உள்ளே வருகிறது. ஒரு கிராம் தங்கக் காசிற்கு செலவிடப்படுகிற உழைப்பிற்கு நூறு சட்டைகள் செய்வதற்கு செலுத்தப்படுகிற உழைப்பு என்ற அர்த்தத்தில் (ஒரு கிராம் தங்கம் = நூறு சட்டை) அளவு வழிப்பட்ட மதிப்பாக, தங்கத்திற்கு ஈடாக சட்டை தனது மதிப்பை தெரிவிக்கிறது. அதேபோல எல்லா பொருட்களுக்கும் தங்கம் சர்வப் பொது சமதைப் பண்டமாக மாறுகிறது. தங்கக் காசுகளைக் கொண்டு அனைத்தையும் வாங்கவும் அனைத்தையும் விற்கவும் முடிகிறது. குறிப்பான வளர்ச்சிக் கட்டத்தில் தங்கத்தின் பாத்திரத்தை பணம் கைப்பற்றுகிறது. ஒரு கிராம் தங்கம், ஒரு கிலோ தங்கம் என்ற அளவு வழிப்பட்ட மதிப்பின் தெரிவிப்பானது ஒரு ரூபாய், பத்து ரூபாய் என்கிற கருத்தளவிலான மதிப்பாக, ஈவுக்களாக பிரிக்கிறது. அரசின் சட்ட முறைகள் உத்தரவாதம் வழங்கி

அவற்றை சட்டமுறைகள் ஒழுங்குபடுத்துகின்றன. இந்த மதிப்பின் தெரிவிப்பை, அளவு வழிப்பட்ட வகையில் எத்தனை ஈவுக்களாக வேண்டுமென்றாலும் வசதிக்கேற்ப ரிசர்வ் வங்கி பிரிக்கிறது.

ஒரு ரூபாய் முதல் ஆயிரம், இரண்டாயிரம் என ரூபாய்களை இவ்வாறாக பிரிக்கிறது. இந்த ஈவுக்களின் அளவு வழிப்பட்ட மாற்றத்தை, அதாவது ஆயிரம் ரூபாய் நோட்டுகளை ஒழித்து இரண்டாயிரத்தை அறிமுகப்படுத்துவது, அல்லது மூவாயிரம் ரூபாயை அறிமுகப்படுத்துவது என்பது பண வடிவில் ஏற்படுத்தப்படுகிற சாதாரண மாற்றமே.

மோடியின் குறிப்பான இந்த அறிவிப்பு, புழக்கத்திலிருந்த ஆயிரம் ரூபாய் நோட்டை ஒழித்து, இரண்டாயிரம் ரூபாய் நோட்டை அறிமுகப்படுத்துவது, புழக்கத்திலிருந்த ஐநூறு ரூபாய் நோட்டுக்கு மாற்றீடாக புதிய நோட்டை அறிமுகப்படுத்துவது அவ்வளவே. இதில் கருப்புப் பணத்தை மீட்கிற சமாச்சாரத்தை இணைப்பது அரசியல் நலன் பாற்பட்ட மோடியின் பச்சை அயோக்கியத்தனம், பச்சைப் பொய்.

இந்த வகையில்தான் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வர்க்கச் சார்புத்தன்மை வெளிப்படும். சொல்லளவில் ஜனநாயகம் (முதலாளிகளுக்கான ஜனநாயகம்!) செயலளவில் சர்வாதிகாரத்தை அது தனது கருத்தியல் மேலாண்மையால் கட்ட விழ்த்துவிடும். அதன் பிரச்சாரத்தை ஏற்காதாரை நாட்டிற்கு எதிரானவர்களாக நிறுத்தும். நாட்டுப்பற்று அற்றவர்களாக நிறுத்தும். நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இந்த அறிவிப்பை எதிர்க்கிற அனைத்து எதிர்க்கட்சிகளையும் கருப்புப் பண ஆதரவாளர்கள் என மோடி முத்திரை குத்திவருவதை இந்தப் பின்புலத்திலேயே பார்க்க வேண்டும். மோடி அரசின்

---

கருத்தளவிலான மதிப்பை பணத்திற்கு செலுத்தி,பொருட்களை வாங்க விற்க பயன்படுத்தப்படுகிறது.தற்போது, சட்டமுறைகளின் ஊடாக தங்கத்தின் இடத்தை நீக்கி, வெறும் கருத்தளவிலான மதிப்பை பணத்திற்கு வழங்குகிற வகையிலான நாணயக் கொள்கைகளை அரசுகள் மேற்கொள்கிறது.

(பொருட்களின்) சரக்கின் சுற்றோட்டத்திற்கு பணம் இடையீட்டு பாத்திரம் வகிப்பது என்ற உண்மையானது எதார்த்தத்தில் அவ்வாறு நமக்கு புலப்படுவதில்லை. அது பணத்தின் சுற்றோட்டத்தில் சரக்கு இடையீட்டுப் பாத்திரம் வகிப்பது போல நமக்குத் தெரிகிறது. முதலாளிய உற்பத்தி முறையில், பொருட்களை உற்பத்தி செய்வதில் செலவிடப்படுகிற உழைப்பை கூடுதலாக அபகரிப்பதன் ஊடாக முதலாளிக்கு உபரி கிடைக்கிறது. அந்த உபரியை சந்தையில் விற்று, மீண்டும் உற்பத்தியில் அந்த உபரி மறு முதலீடு செய்யப்பட்டு உபரி மூலதனம் (பணம்) திரட்டப்படுகிறது. மீள் உற்பத்தியின் பொருட்டு திருப்பி செலுத்தப்படும் உபரி மூலதனத்தை, “மாறும் மூலதனம்” என மார்க்ஸ் வரையறுத்தார்.

இந்த மடைமாற்றுகிற அயோக்கியத்தனத்தை நிரூபணம் செய்வதற்கு பின்னால் நாம் இங்கே செல்லப்போவதில்லை. ஆனால் இதை நிரூபணம் செய்வதில் ஈடுபடுவர்கள், சுமார் எட்டு லட்சம் கோடி பெறுமானமுள்ள கடனைப் பெற்றுக்கொண்டு சுதந்திரமாக உலவி வருகின்ற மல்லையாக்களையும், அதானிக் களையும் மறந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு கடன் வழங்கிய வங்கிகள், அரசுகளின் செயல்பாடுகளை கவனிக்கத் தவறுகின் றனர். வங்கிகளின் நிதி நிலைமைகளுக்கும் வாராக் கடன் நிலுவைக்குமான தொடர்பை கவனிக்கத் தவறுகிறார்கள். அதாவது இந்த அறிவிப்பின் பின்னாலான வர்க்க நலன் குறித்தோ, இத்தருணத்தில் அது குறிப்பாக வெளிப்படுகிற காரணம் குறித்தோ, செய்யப்பட வேண்டிய பொருளாதார பகுப்பாய்விலிருந்து வெகுதூரம் விலகிச் செல்கிறார்கள்.

எந்த ஒரு முதலாளித்துவ அரசும், தனது வர்க்கச் சார்பு நடவடிக்கையை பட்டவர்த்தனமாக அறிவித்துக்கொண்டு செயல்படுத்துவதில்லை. அது, முதலாளித்துவ வளர்ச்சியை நாட்டின் வளர்ச்சியாகவும், அதற்கு சேவை செய்வதை நாட்டின் நலன் கருதிய சேவையாகவுமே காட்டும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பகைவர்களைக் கட்டமைத்து தனது சமூக மேலாண்மையை தக்க வைத்துக்கொள்ள முயலும். எனவே கருப்பு பண மீட்பு, கள்ளப் பண ஒழிப்பு, தீவிரவாத பணத்தை கட்டுப்படுத்துவது போன்ற விவகாரங்களை அம்பலப்படுத்துவது எவ்வளவு அவசியமோ, அதன் விளைவுகளை கண்டிப்பது எவ்வளவு அவசியமோ, அது போலவே இந்த நடவடிக்கைக்கு பின்னாலான பொருளியில் பகுப்பாய்வை மேற்கொள்வதும் அவசியமானதாகும். அதை வெறும் ஊக வழிப்பட்ட ஆய்வாக அல்லாமல், நிலவுகிற அமைப்பின் சமகாலச் சூழல் மற்றும் அதன் வளர்ச்சிக் கட்டங்களில் மாறி வருகிற பண்பு மாற்றங்கள் மீதான அறிவியல் ஆய்வாக அமையவேண்டும்.

கருப்புப் பணம், ஹவாலா வழியிலோ இதர வழியிலோ வெளிநாட்டு நாணயமாக மாற்றப்பட்டு, சுவிஸ் வங்கிகளின் பெட்டகத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டும், நகைகளாகவும் இதர பல வடிவங்களிலும் சுற்றோட்டத்தில் கலந்தோ விலகியோ ஓடிவருகிறது[2].

---

2 சரக்கு–பணம்–சரக்கு என்ற மூலதனத்தின் சுற்றோட்டத்தில், குறிப்பாக சொல்லப் போனால் கருப்புப் பணம் என்பது உபரி மூலதனத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அதாவது, பெரு முதலாளிகளால் சுரண்டப்பட்ட சமூகத்தின் உபரி மூலதனத்தின் பாரிய வடிவம்தான் கருப்புப் பணம். இந்த உபரி மூலதனமானது (கருப்புப்பணம்) மீண்டும் உற்பத்திக்கு சென்றோ செல்லாமலோ, மூலதன சுற்றோட்டத்தில் வந்தோ வராமலோ உள்ளது. இந்தியப் பெரு முதலாளிவர்க்கத்தினர் இந்த உபரியை ஐநூறு

*இதைக் கண்டுபிடிப்பது என்பது இருட்டறையில் கருப்புப் பூனையைத் தேடுவதற்கு ஒப்பாகும். ஒட்டுமொத்த சுற்றோட்டத்தில், வரி ஏய்ப்பு செய்கிற, வரி முறைகளில் வராத பணத்தை மீட்கிற இந்த கருப்புப் பண மீட்பு விவகாரம், அரசியல் நிர்வாக நடைமுறை சார்ந்தது, நபர் சார்ந்தது. இச்சூழலில், சுற்றோட்டத்தில் உள்ள 500, 1000 ரூபாயை வங்கியில் மாற்றச் சொல்கிற அறிவிப்பால் இருட்டறையில் உள்ள கருப்புப் பூனையைக் கண்டறிய இயலாது என்பது வெள்ளிடைமலை.*

*ஆனால் உழைத்து சம்பாதித்த மக்களின் பணத்தை, இந்திய ஆளும்வர்க்கம் ஏமாற்றிப் பறிப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?*

---

ரூபாயாக, ஆயிரம் ரூபாயாக வெறுமனே கொல்லைப் புறத்தில் மூட்டை கட்டி வைக்கவில்லை. சுவிஸ் வங்கியில் வெளிநாட்டு நாணயமாக மாற்றிவைத்துள்ளனர். கருப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் யார் யார் எவ்வளவு பதுக்கியுள்ளனர் என்ற விவரம் அடங்கிய பனாமா அறிக்கையை வெளியிடவேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியும், இந்தியப் பெரு முதலாளிகளை இன்று வரை ஆளும் அரசு காத்து வருகிறது.



The Rescue Plan

## 1. வங்கிகளின் நிதி நிலையை மீட்பது

இந்திய அரசின் ரூபாய் நோட்டு செல்லாது என்கிற அறிவிப்பு தொடர்பாகவும் அதன் பின் விளைவுகள் தொடர்பாகவும் எண்ணற்ற கட்டுரைகளும் விவாதங்களும் வந்துள்ளன. அதன் சாராம்சத்தை தொகுத்துக் கூறின் நாம் மேற்கூறியபடி, இந்த நடவடிக்கைக்கும் கருப்பு பண ஒழிப்பிற்கும் தொடர்பே இல்லை, மோடியின் இந்த மோசடி நடவடிக்கை வெறும் கண்துடைப்பு, இந்த அறிவிப்பிற்கு பின்னாலான விஷயங்கள் குறித்து போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வில்லை என்பது குறித்ததாக இருந்தன. நிலவுகிற நாடாளுமன்ற அமைப்பிற்குள்ளாகவே அனைத்து முரண்பாட்டையும் தீர்த்துக்கொள்ளக் கோருகிற சமூக ஜனநாயக சீர்திருத்தவாத கட்சிகளின், அறிவுஜீவிகளின் வாதங்கள் இவ்வாறே இருந்து வருகின்றன. அவர்களின் எல்லைகளும் இதுதான்!

சரி, இப்போது விஷயத்திற்கு வருவோம், கிட்டத்தட்ட மோடியின் போலி இந்து தேசபக்த கும்பலைத்தவிர பெரும்பாலானவர்கள் இந்த நடவடிக்கையை எதிர்த்துவருகிற நிலையில், எதார்த்தத்தில் மக்களின் பாதிப்பை கண்டுவருகிற நிலையில் மோடியின் இந்த அறிவிப்பிற்குப் பின்னால் என்ன காரணம் இருக்கு முடியும்? அது பொருளாதார அடிக்கட்டு மானத்தில் வேர் விட்டுள்ளது. இந்த அறிவிப்பை மேலோட்டமாக அரசியல்பாற்பட்ட அறிவிப்பாக கருதாமல் அதன் அடித்தளமான பொருளாதாரக் கூறுகளில் கவனத்தை செலுத்த வேண்டும்.

எனவே இச்சிக்கல் தொடர்பான நமது பொருளாதார பகுப்பாய்வை, இந்திய நிதி மூலதனத்தை கட்டுப்படுத்துகிற வங்கிகளில் மோசமான 'நிதி மூலதன இருப்பு' நிலையிலிருந்து தொடங்குவோம்.

இந்தியாவில் மொத்தம் 27 பொதுத்துறை வங்கிகளும்,23 தனியார் வங்கிகளும், 43 வெளிநாட்டு வங்கிகளும் 56 மாநில வங்கிகளும் 1589 நகர் கூட்டுறவு வங்கிகளும் 93,550 கிராம கூட்டுறவு வங்கிகளும் இயங்கி வருகின்றன. இந்த வங்கிகளின் முக்கிய நோக்கம் மேற்குறிப்பிட்டவாறு நிதி மூலதனத்தை கட்டுப்படுத்துவது, பெரு முதலாளிக்கு உபரியை பெருக்கித் தருவது ஆகும்.

வங்கிகள் என்பது பொது மக்களுக்கு சேமிப்பு வழங்குவது என்ற அம்சத்திலேயே பெரும்பாலான புரிதல்கள் உள்ளன. உண்மைதான், அதோடு தொழில்துறை முதலீடுகளுக்கு கடன் வழங்குவது, கடன் பத்திரங்களை வழங்குவது என தொழில்துறை சார்ந்த நிதி மூலதன பரிவர்த்தனைகளே வங்கிகளின் பிரதான செயல்பாடாக உள்ளது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில், வங்கிகளின் கடன்—செலாவணி அமைப்பு தவிர்க்க வியலாத பண்பாகும். வெளியில் சேமிப்பு வங்கி, கடன் வங்கி என்ற வகைமையில் வேறுபட்டாலும் நிதி மூலதனம் என்ற வகையில் அது ஒன்றாகவே அடிப்படையில் ஒன்று கலக்கப் படுகிறது.

இந்திய வங்கிகளைப் பொறுத்தவரை நவதாராளமயமாக்கல் கட்டத்தில், தனியார் வங்கிகள் திறக்க ஊக்கமளிக்கப்பட்டது. 90களில் HDFC வங்கியின் தொடக்கம் முதல் இன்று வரை பல பகாசுர வங்கி நிறுவனங்கள், சிறு வங்கிகளை முழுங்கி பெரும் நிதிமூலதன நிறுவனங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. பொதுத்துறை வங்கிகளைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த

சந்தையின் 80 விழுக்காட்டை கட்டுக்குள் வைத்துள்ளது. இன்றைய உலகப் பொருளாதாரத்தில் வங்கிகளே பொருளா தாரத்தின் இதயமாக உள்ளது. இந்தப் பின்புலத்தில் இந்திய வங்கிகளின் நிதி மூலதன இருப்பு குறித்தும் அதன் ஆரோக்கிய நிலைமை குறித்தும் நமது கவனத்தைக் குவிப்பது அவசியமாகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக இந்திய பொதுத்துறை வங்கிகள், இந்தியப் பெருமுதலாளிகளுக்கு வழங்கிய கடன்கள் அதிவேகத்தில் உயர்ந்துள்ளது. குறிப்பாக 2008ஆம் ஆண்டு கால பொருளாதார மந்த கட்டத்திற்கு பின்பாக இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்த, முதலீடுகளை உயர்த்த இந்த கடன்கள் அவசியமாக அரசு கருதியது. அதன் விளைவாக, இன்று வங்கிகளுக்கு வர வேண்டிய வாராக் கடனின் மதிப்பு சுமார் 8 லட்சம் கோடி ரூபாயை தொட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், இந்தியப் பெரு முதலாளிகளுக்கு இந்திய பொதுத்துறை வங்கிகள் வழங்கிய கடன் அளவு நானூறு மடங்கு அதிகரித்துள்ளது. அதன் முதல் நான்கு இடங்களில் முறையே **ரிலையன்ஸ் அனில் அம்பானி 1.21 லட்சம் கோடி, ரிலையன்ஸ் முகேஷ் அம்பானி 1.87 லட்சம் கோடி, எஸ்ஸார் குழுமம் 1.01 லட்சம் கோடி, அதானி குழுமம் 0.96 லட்சம் கோடி கடன் தொகை நிலுவையில் உள்ளது.**

இன்றுவரை, இந்தத் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக, ஆளும் அரசோ கடனை தள்ளுபடி மட்டுமே செய்துவருகிற நிலைக்கு அது சென்றது. ஒட்டுமொத்த ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இந்திய வங்கிகளில் மட்டுமே இவ்வாறான மட்டமான வாராக் கடன் நிலைமைகள் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கிறது.

இந்தப் பணம் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது, என்கிற விவரம் கடன் கொடுத்த வங்கிகளுக்கே தெரியாது என்பது தான் இதில் மிகப்பெரும் வேடிக்கை!

சாமானிய மக்கள் வங்கிகளில் விவசாயக் கடன் பெறுவது, கல்விக் கடன் பெறுவது, பெரும் சவாலாக இருக்கிற நிலையில், இந்தியப் பெரு முதலாளிகளுக்கு மட்டும் எந்த வரைமுறையும் கண்காணிப்பும் இன்றி கோடிக்கணக்கில் கடன் வழங்கப்பட்டது. கடன் கொடுக்கப்பட்ட பின்னர் அந்த கடன் சரியான முறையில் செலவு செய்யப்படுகிறதா, வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியுள்ளது என்பதை யார் கண்காணிக்கிறார்கள்? விடை இல்லை! லட்சம் கோடிகளாக இந்தியப் பெரு முதலாளிகளுக்கு வழங்கப்பட்ட இந்தக் கடன் மீண்டும் வட்டி வடிவத்திலோ,

முதல் வடிவத்திலோ, இருப்பாக வங்கிகளுக்கு மீண்டும் வரவில்லை.

இந்த சிக்கல், இந்திய வங்கிகளுக்கு பெரும் சுமையாக தலைமேல் தொங்குகிற கத்தியாக தொங்கிக்கொண்டிருக்கிறது. மோசமான நிதி கையிருப்பின் காரணமாக வங்கிகள் கடும் நிதி நெருக்கடியை நோக்கி திவால் நிலைமையை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றன.

இதேநேரத்தில், உலகிலுள்ள நிதி மூலதன நிலைமைகளையும் மையப்படுத்தி கண்காணித்து, ஆலோசனைகள் வழங்கி வருகிற பன்னாட்டு நிதியகம், இந்திய வங்கிகளை விரைவாக புனரமைக்க வற்புறுத்தி வருகிறது. உலகளவில் கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி, இந்தியாவிற்கு சாதகமாக இருக்கிற காரணத்தால் மட்டுமே சுமார் 7 விழுக்காடு அளவிற்கான வளர்ச்சியை இந்தியப் பொருளாதாரம் பெற்றுவருகிறது. மாறாக அமெரிக்காவைச் சுற்றி வளைத்துள்ள பொருளாதார நெருக்கடியும், இதர புற நிலைமைகளும் வரும்காலத்தில் மாறுகிற பட்சத்தில் இந்தியப் பொருளாதாரம் ஆட்டம் காணத் துவங்கும். பண வீக்கம் அதிகரிக்கும். வர்த்தகம் பாதிக்கும். இதை மனதில் வைத்தே முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன் (பன்னாட்டு நிதியகத்தின் முன்னால் முதன்மை பொருளாதார ஆலோசகரும் கூட) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெரு முதலாளிகளிடம் இருந்து வர வேண்டிய கடனை, வரவு வைத்து வங்கிகளில் நிதி நிலைமைகளை கட்டுக்குள் வைக்க முயன்று தோல்வியுற்றார்.

இந்திய வங்கிகளின் வாராக்கடன் மதிப்பானது, இலங்கை, ஓமன் போன்ற நாடுகளின் ஒட்டுமொத்த மொத்த உற்பத்திக்கு சமமாக உள்ளது.

- மொத்தமுள்ள 27 பொதுத்துறை வங்கிகளில் 11 வங்கிகளின் லாப வீதம் மிக அதிகமாக 93 விழுக்காடு அளவிற்கு மோசமாக சரிந்துள்ளதாக மூன்றாம் காலாண்டுகால (Q3) தகவல் அறிக்கை குறிப்பிடுகிறது.
- தனியார் வங்கிகளைவிட மூன்று மடங்கு அதிகமாக பொதுத்துறை வங்கிகள் வாராக் கடன் நிலுவைத் தொகை உள்ளது.
- கடந்த பத்து ஆண்டுகளில் வங்கிகளின் செலவு வீதத்தைவிட வரவு வீதம் தடாலடியாக குறைந்து வருகிறது.




ஒரு வங்கியின் ஆரோக்கிய நிலைமைக்கு அதன் நிதி மூலதன வைப்பு நிதிக்கும் செலவுக்குமான வீதம் சுமார் 9 விழுக்காட்டிற்கு கீழ் குறையாமல் இருக்க வேண்டும். இவ்வரையறை பன்னாட்டு நிதியகம் உலக வங்கிகள் அனைத்திற்கும் நிர்ணயத்திருக்கும் பொது வரம்பு. சில புற சந்தை விளைவுகளை கவனத்தில் கொண்டால் இந்த வீதம் 12 விழுக்காட்டிற்கு கீழாக சரியக் கூடாது என்கிறது. இந்த வீதம் capital adequecy ratio என அழைக்கப்படுகிறது.




ஆதாரம்: IMF

இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய வங்கிகளுக்கு இந்த வீதம் 12 விழுக்காட்டிற்கு கீழாக சரியக் கூடாது என வரையறுத்துள்ளது. தற்போது, இந்திய பொதுத்துறை வங்கிகளைப் பொறுத்தவரை கடந்த 2015 மார்ச் மாதத்தில் இந்த வீதம் 12 விழுக்காடாக




ஆதாரம்: IMF

சரிந்தது. தனியார் வங்கிகளின் வீதம் 16 விழுக்காடாக சரிந்தது.

இந்திய வங்கிகளின் வைப்பு நிதியும், குறைந்தபட்ச வைப்பு நிதி வரம்பை தொடத் துவங்கியுள்ளது.

| Return on assets and return on equity of SCBs: Bank group-wise | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (Per cent) |
| Sr. No. | Bank Group/Year | Return on Assets | | | Return on Equity | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | 2012-13 | 2013-14 | 2014-15 | 2012-13 | 2013-14 | 2014-15 |
| 1 | Public sector banks | 0.80 | 0.50 | 0.46 | 13.24 | 8.48 | 7.76 |
| 2 | Private sector banks | 1.63 | 1.65 | 1.68 | 16.46 | 16.22 | 15.74 |
| 3 | Foreign banks | 1.92 | 1.54 | 1.87 | 11.53 | 9.03 | 10.25 |
| | All SCBs | 1.04 | 0.81 | 0.81 | 13.84 | 10.69 | 10.42 |
| | | | | | | | |

Notes: Return on Assets = Net profit/Average total assets.
Return on Equity = Net profit/Average total equity.
Source: Annual accounts of respective banks.

அதேபோல வங்கிகளுக்கு வர வேண்டிய நிதி வரவும் 0.45 விழுக்காட்டிற்கு சரிந்துள்ளது. உலகளவில் ஜப்பானுக்கு அடுத்து இந்திய வங்கிகளே இரண்டாம் இடத்தில் உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் பொதுத்துறை வங்கிகளுக்கு வரவேண்டிய பங்கு வரவு வேகமாக சரிந்துவருவதை கீழ்வரும் புள்ளிவிவரங்கள் உறுதிசெய்கிறது.

(**ஆதாரம்:** Speech of Deputy Governor, Reserve Bank of India, Shri. S. S. Mundra on 28/4/16)

இதே போக்கு தொடர்ந்தால் வங்கிகள் நிதி மூலதனம் இல்லாமல் திவால் நிலைமைக்கு தள்ளப்படும். இதனால் வங்கிகளில் பணத்தை திரும்ப எடுக்க முடியாது, ஏடிஎம் களில் பணம் இருக்காது, பொருட்களின் விலை திடுமென எகிறும், பெரும் குழப்பமும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படும்.

அண்மையக் காலங்களில் இவ்வாறான நெருக்கடிகள் உலக அளவில் அதிகரித்தும் வருகிறது. வங்கி திவால் நிலைமையால் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடிகளான கிழக்காசிய நெருக்கடி (1997), அர்ஜென்டினா நெருக்கடி (2001), ஜப்பான் நெருக்கடி (1998), மெக்சிகோ நெருக்கடிபோல இந்தியாவிலும் வங்கிகளின் மோசமான நிதிமூலதன நிலைமைகளால் பொருளா தார நெருக்கடி ஏற்படும் என ரிசர்வ் வங்கி முன்னுணர்ந்து நிலைமையை சீராக்குகிற முயற்சிகளை மேற்கொண்டது. 2017 மார்ச் மாதத்திற்குள்ளாக வங்கிகளின் வாரக் கடனை மீட்டு, வங்கிகளை சீரான நிலைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன் எடுத்துவந்தார்.

ஒரு நாட்டின் வங்கிகள் திவால் நிலைக்குச் சென்றால், அந்நாட்டின் அரசானது தனது கருவூலப் பணத்தை வங்கிகளுக்கு மூலதனமாக வழங்குவதன் மூலமாக சிக்கலை தற்காலிகமாக சரிக்கட்டும்.

ஒரு வங்கி எப்போது நெருக்கடியை எதிர்கொள்கிறது என்பது குறித்து உலக வங்கியின் வரையறை வருமாறு:

- வங்கிகள் வழங்கிய கடன் நிலுவைத் தொகை அல்லது சொத்துக்கள் அதிகரிப்பது
- இருப்பில் உள்ளதைவிட சுற்றோட்டத்தில் பணம் அதிகரிப்பது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் வரவைவிட, வங்கிக்கு வெளியே அதிக பணம் புழங்குவது
- வங்கி வழங்குகிற வட்டி வீதம் அதிகரிப்பது,கடன் பத்திரங்களின் மதிப்பு குறைவது. இது ஒருகட்டத்தில் வங்கிகளில் முதலீடு செய்ததைவிட, அதிக தொகைகளை வங்கி வழங்குவதற்கு வித்திடும்.

இந்திய வங்கிகளைப் பொறுத்தவரை அதன் கடன் நிலுவைத் தொகை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துவருவது பட்டவர்த்தனமாக தெரிந்த விஷயம்தான். ரிசர்வ் வங்கியிடம் ஆபத்து காலத்தில் பயன்படுத்த வைத்துள்ள சுமார் 2 லட்சம் கோடி பணத்தை, வங்கிகளின் திவால் நிலைமைக்கு பயன்படுத்த முயன்ற நிதியமைச்சகத்தின் முடிவை முன்னாள் ஆளுநர் ராஜன் எதிர்த்ததால், அம்முடிவை தற்காலிகமாக கைவிட்டது பாஜக. ஒரு கட்டத்தில் நெருக்கடி நிலையை சமாளிக்க, இந்திய வங்கிகளுக்கு சுமார் 20,000 கோடி ரூபாய் வழங்குகிற அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம்

இந்திய அரசு வெளியிட்டது. மேலும் 2018ஆம் ஆண்டுக்குள் 70,000 கோடி ரூபாய் வழங்குவதாக உத்தேசித்துள்ளது. ஆனால் சிக்கலை தீர்க்க இந்தப் பணம் போதாது. மேலும் பொதுமக்களின் வரிப்பணத்தை இவ்வாறு வங்கிகளுக்கு மட்டுமே வாரி வாரி வழங்குவது என்பது அதன் இதர பொது சுகாதார கல்விச் செலவுகளுக்கு பயன்படுத்துகிற தொகையைக் கட்டுப்படுத்திவிடும்.

ஆக, தீர்வென்னவென்றால், இந்தியப் பெரு முதலாளிகளுக்கு கடனாக கொடுத்துள்ள நிதி மூலதனம் ஏதோவொரு வகையில் மீண்டும் வங்கிகளுக்கு இருப்பாக திரும்ப வேண்டும். இது ஒன்றே இந்திய வங்கிகளை மீட்கிற வழி.

இந்த இடத்தில் நிதி மூலதனத்தை வங்கிகளின் ஊடாக கட்டுப்படுத்துகிற நிதியாதிக்க கும்பலுக்கும் ஏகபோக முதலாளி களுக்குமான உறவின் சிறு உராய்வுகள் மேலடுக்கில் வெளிப்படு கிறது.

ஆனாலும், 2008ஆம் ஆண்டில் லே மென் வங்கி திவாலை மீட்க, அமெரிக்கா தடுமாறியது, நெருக்கடிக்கு வித்திட்டதை மறக்காத இந்திய அரசு, இந்த இடத்தில் ஏதேனும் செய்தே ஆக வேண்டிய நெருக்கடியில் சிக்கியது.

மக்களின் வரிப்பணத்தால் இயங்குகிற அரசு இயந்திரம் அதன் அங்கமான வங்கிகள் இந்த இடத்தில் என்ன செய்திருக்க வேண்டும்? மக்களின் வரிப்பணத்தை வங்கிகளின் ஊடாக இந்தியப் பெரு முதலாளிகளுக்கு வழங்கிய கடனை வசூலித்து வங்கி நிலையை சீராக்க வேண்டும்.

ஆனால்,அம்பானி, அதானியிடம் கடனை வசூலிப்பது என்பது கனவிலும் செய்ய இயலாத காரியம். அரசிடமோ போதுமான வகையில் வங்கிகளுக்கு வழங்க நிதி இல்லை. என்ன செய்வது, உதிரியாக சுற்றோட்டத்தில் சேமிப்பாக, சிறு, குறு தொழிலில் புழங்குகிற ரொக்கப் பணத்தை வங்கிகளுக்கு உறிஞ்சி எடுப்பது என்ற அயோக்கியத்தன முடிவுக்கு வந்தது. முதலாளித் துவ வர்க்க நலனுக்காக இயங்குற அரசு இதைத்தானே செய்யும்?

அதை எவ்வாறு செய்வது? கள்ளப் பணம் ஒழிப்பு, கருப்புப் பண மீட்பு போன்ற பெயரில் 500/1000 ரூபாய் செல்லாது என்ற அறிவிப்பில், புழக்கத்தில் உள்ள சுமார் 14 லட்சம் கோடியை உள்வாங்குவது. அதாவது புழக்கத்தில் உள்ள ரொக்கப் பணத்தில் 86 விழுகாட்டுப் பணத்தை, இந்த அறிவிப்பின் ஊடாக வங்கிகளில் திரட்டுவது. வங்கிகளின்




திவால் நிலையைக் காப்பாற்ற தொழில திபர்களை காப்பாற்ற மக்களின் பணத்தை ஏமாற்றி பிடுங்குவது.

ரூபாய் நோட்டு செல்லாது என்ற மோசடி அறிவிப்பின் ஊடாக, மக்களிடம் புழங்குகிற பெரும் பணமானது வங்கிக்கு இருப்பாக, வரவாக வருகிறது.

ரிசர்வ் வங்கி புழக்கத்தில் விட்டுள்ள ஒட்டுமொத்த பணம் — 17 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். இதில் 500, 1000 ரூபாய் புழக்கத்தில் உள்ளவை — 14 லட்சத்து 15 ஆயிரத்து 500 கோடி ரூபாய். தற்போது இந்தப் பணம் செல்லாது என்ற அறிவிப்பின் மூலமாக, புழக்கத்தில் உள்ள 14 லட்சத்து 15 ஆயிரத்து 500 கோடி ரூபாயில் குறைந்தபட்சம் 90 விழுக்காட்டு சுற்றோட்டப் பணமாவது வங்கிக்கு வரவாக வரும். வரவாக வந்த இந்தப் பணத்தை மிகவும் கட்டுபடுத்தப்பட்ட வகையிலும் குறைவான வகையிலும் 2000, 100 ரூபாய் நோட்டுகளாக வங்கிகள், ஏடிஎம்களின் வழியாக மக்களுக்கு வழங்கப்படும்.

ஆக, வரும் நாட்களில் வங்கிகளில் கையிருப்புப் பணம் பல மடங்கு பெருகியிருக்கும். இந்த அறிவிப்பிற்குப் பிறகு, தற்போது வரை சுமார் 11.5 லட்சம் கோடி ரூபாய் வங்கிகளில் வரவாக வந்துள்ளது என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ஆனால் மக்களுக்கோ வெறும் 3.5 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே வங்கிகள், ஏடிஎம்களின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இந்திய வங்கி கட்டுமானமானது, ஒரு லட்சம் மக்களுக்கு சுமார் 10

வங்கிகள், 16 ஏடிஎம்கள் என்ற வகையில் மிக மோசமாக உள்ள சூழலிலும், மாற்றுப் பணம் அச்சடிக்கப்படாதது போன்றவை இதற்கு காரணமாக இருந்தாலும், மக்களிடம் முழுப்பணத்தை வழங்க வேண்டும் என்ற யோசனை இருந்தால்தானே அதை அரசு செய்யும்? அதன் நோக்கமே பணத்தை உறிஞ்சுவதாக இருக்கிறபோது, எவ்வாறு அது உறிஞ்சிய பணத்தை மக்களிடம் திருப்பி வழங்கும் என எதிர்பார்க்க இயலும்? நமது சமூக சீர்திருத்தவாதிகள், நாடாளுமன்ற ஜனநாயகக் காவலர்கள் இதுகுறித்து ஏன் வாய் திறக்க மறுக்கிறார்கள்?

ஒட்டுமொத்தமாக பார்த்தால் நேரடியாக அம்பானிக்கும், அதானிக்கும், ஜெபி குழுமத்திற்கும், எஸ்ஸார் குழுமத்திற்கும் வழங்கிய கடன்களை வசூலித்து வங்கிகளின் நிதி நிலைமையை சீராக்காமல், மக்களை வதைத்து பணத்தை உறிஞ்சி கடந்த காலங்களில் அம்பானிகளுக்கு கடனைத் தள்ளுபடி செய்தது போல இப்போது செய்யப்போகிறார்கள் என்பதே உண்மை. அதை செய்தும் வருகிறார்கள்.

கருப்புப் பண மீட்பு, கள்ளப் பண ஒழிப்பு, தீவிரவாத பண ஒழிப்பு எல்லாம் மக்களிடம் இருந்து பணத்தை பறிக்கிற வேலையை நியாயப்படுத்துவதற்கும் சொந்த அரசியல் நலனை தக்கவைத்துக் கொள்வதற்குமான மேற்பூச்சு வாதங்களே. ஆளும் வர்க்கத்தால் பயன்படுத்தப்படுகிற பொய்ப் பிரச்சார கருத்தியல் மேலாண்மைத் தந்திரமே!

மோடி அரசின் முடிவை இந்திய தொழிலகக் கூட்டமைப்பானது (CII) வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு என வரவேற்றுள்ளதை இந்த பின்புலத்தில்தான் பார்க்கவேண்டும். அதன் அறிக்கையில் "மத்திய அரசின் இந்த முடிவால், வங்கிகளின் வைப்புக் கணக்கில் பணத்தை மக்கள் முதலீடு செய்வார்கள். வங்கிகளின் நிதி நிலைமை பல மடங்கு அதிகரிக்கும், மக்கள் வைப்பு அட்டை பயன்படுத்தத் தொடங்குவார்கள்" எனத் திருவாய் மலர்ந்திருப்பதன் ஊடாக நமது முடிவை மெய்ப்பித்துள்ளார்கள்.

பணம் உள்ளவனிடம் இருந்து பணத்தை எடுத்து பண மற்றவனுக்கு வழங்குகிற ராபின் ஹூட் கதாப்பாத்திர வேலையை, இந்திய வங்கிகள் தலைகீழாக செய்கிறது. அம்பானி, அதானியிடம் வாராக் கடனைப் பெற்று, நிதிநிலைமையை சீராக்கி, ஏழை எளிய மக்களுக்கு கடன் வழங்குவதற்கு மாறாக மக்களிடம் இருக்கிற மிச்ச சொச்ச பணத்தை பிடுங்கி இந்தியப் பெரு முதலாளிகளைக் காக்கிறது. சிறு குறு

*விவசாயிகளுக்கு வழங்கிய கடனையும் கல்விக் கடனையும் வசூலிக்க பயன்படுத்துகிற வங்கிகளின் சாட்டையானது, இந்தியப் பெரு முதலாளிகளிடம் சுருண்டு கொள்கிறது. விவசாயி, மாணவர்களின் கழுத்தை நெருக்கி தூக்குப் போட வைக்கிறது. ஆனால் பெருமுதலாளிகளின் காலைப் பிடிக்கிறது. இந்த அரசின் வர்க்கப் பண்பை புரிந்துகொள்ள இதுவே எதார்த்த சாட்சி.*

*மேலும், வங்கிகள் என்பது மக்களின் நிதி சேமிப்பிற்காக தொடங்கப்பட்ட சேவை நிறுவனம் அல்ல. அது தொழில் நிறுவனங்களின் லாபத்தை அதிகரித்திட, சமூகத்தின் நிதி மூலதனத்தை கட்டுப்படுத்துகிற, முதலாளியப் பொருளா தாரத்தை சமூகமயப்படுத்த முனைகிற நிதிமூலதன நிறுவனம். இந்திய வங்கிகளின் செயல்பாடுகளை, இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்திற்கும் வங்கிக்கும் உள்ள உறவை, வங்கி வலைப்பின்னலுக்கு வெளியே உள்ள பெரும்பான்மை மக்களை தன்னுடன் இணைப்பதில் அதற்குள்ள தடைகள் குறித்த ஆய்வு களை நாம் வரலாற்றுரீதியில் அணுகுவது அவசியமாகியது.*



"This is a bail-out!"

உ. அனைத்து மக்களையும் வங்கிகளின் சங்கிலியில் பிணைப்பது

**வங்கியும் நிதி மூலதன ஒன்றுகுவிப்பும்:**

*நிலவுகிற முதலாளித்துவ சமூக அமைப்பில், பணம் — பொருள் பரிவர்த்தனைக்கான இடைத் தரக வேலையைச் செய்கிறது. வங்கி—பணப் பரிவர்த்தனைக்கான இடைத்தரக வேலையைச் செய்கிறது. முதலாளியப் பொருளாதாரத்தை சமூக மயப்படுத்துவதற்கு வங்கிகளே முக்கியப் பங்காற்று கின்றன.*

*முதலாளித்துவத்தின் வளர்ச்சி விதியின்படி, சுற்றோட்டத்தில் மக்களிடம் ரொக்கமாக*

*பணம் தேங்கி நிற்பதை முதலாளித்துவம் விரும்புவதில்லை. முதலாளித்துவ உற்பத்தி முறையைப் பொறுத்தவரையில் ரொக்கப் பணம் மூலதனமாக ஏதேனும் ஒருவகையில் அதன் வலைப்பின்னலில் வந்தாக வேண்டும். சுற்றோட்டத்தில் உள்ள ரொக்கப் பணம் வெறும் சேமிப்பாக, முதலீடு செய்யப்படாமல் இருப்பதை முதலாளித்துவம் விரும்பாது. லெனினை மேற்கோள் காட்டுவதென்றால் "பணப்பரிமாற்றம் நடைபெறும்போது இடைத்தரகராச் செயல்படுவதே வங்கிகள் ஆற்றும் தலையாய, முதன்மையான பணி. இந்தப் பணியைச் செய்து இவை செயலற்ற பண மூலதனத்தைச் செயல் முனைப்புள்ள, அதாவது லாபமளிக்கும் மூலதனமாக மாற்றுகின்றன. சகலவிதமான பண வருமானங்களையும் அவை வசூலித்து அவற்றை முதலாளித்துவ வர்க்கத்தின் கையில் ஒப்படைக்கின்றன." (ஏகாதிபத்தியம் – முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்)*

*எனவே, முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கினில், ரொக்கமாக வெளியில் தங்கியிருக்கிற பணம் வங்கிகளுக்கு வந்தே தீரவேண்டும்.*

*முற்றிலும் தொழில்மய நாடாக முழுமை பெறாத இந்தியா போன்ற நாடுகளில் ரொக்கப் பணமே 95 விழுக்காட்டிற்கு, பொருள் பரிமாற்று சாதனமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும் இந்த ரொக்கப் பணம், அதாவது இந்தப் பண மூலதனம் முழுவதும், மையப்படுத்தப்பட்ட வகையில், இந்திய ஆளும் வர்க்கம் இதுவரை வங்கிகளில் திரட்டியது இல்லை. இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 2011ஆம் ஆண்டுகால புள்ளி விவரப்படி வெறும் 35 விழுக்காட்டு மக்களே வங்கிகளில் கணக்கு வைத்துள்ளனர்.*

*ஒட்டுமொத்த சமூகத்தின், பணப் பரிவர்த்தனை மீதான தனது கட்டுப்பாட்டை, அதாவது மையப்படுத்தப்பட்ட வகையில் நிதி மூலதனத்தை கட்டுக்குள் வைத்திருப்பது, நிதியை திரட்டுவது என்பது இந்தியாவைப் பொறுத்தவரை சவாலான காரியம். ஏனெனில், கிராமப்புற பொருளாதாரத்தில் வங்கிகள், தபால் நிலையங்களின் ஊடாக, கிராம மக்களை தனது முதலாளியப் பொருளாதாரத்தில் கொண்டு வருவது எளிதான காரியம் இல்லை. ஏனெனில் பணப் பரிவர்த்தனைக்கு வங்கிகளை பயன்படுத்துகிற வகையில் இந்திய கிராமப் பொருளாதார உறவுகள் வளர்ச்சியுறவில்லை.*

*நகரங்களில் நிலைமை வேறு, கூலிக்கு உழைப்பை விற்கிற நகர்ப்புற உழைப்பாளிகளின் கூலியானது, வங்கிகளின் ஊடாகவே*

பெரும்பாலும் நடைபெறுகிறது. சேமிப்புத் திட்டங்களால் கவரப்பட்ட வைப்பு நிதிகளும், மாதச் சம்பளமும் வங்கிகளை மையமிட்டே நடைபெறுகிறன. நகர்ப்புற மக்களின் நிதி மூலதனம் பெரும்பாலும் மையப்படுத்தப்பட்டு, கட்டுப்பாட்டிற்குள் வருகிறது. ஆளுவர்க்கத்திற்கான சிக்கல், இந்தியாவின் அரை நகரங்கள், கிராமங்களின் மையப்படுத்தப்படாத சிறு குறு வியாபார சந்தையில் புழங்குகிற ரொக்கப் பணத்தை எவ்வாறு ஒன்று திரட்டுவது என்பதில் வேர்விட்டுள்ளது.

தொகுத்துக்கூறின் இந்தியாவின், வளர்ச்சியுறாத கிராமத் துணை நகரப் பொருளாதார உற்பத்தி உறவுகளை அதன் மூலதனத்தை எவ்வாறு முதலாளியப் பொருளாதார வலைப் பின்னலுக்குள் கொண்டு வருவது என்பதே. அதாவது கிராமப்புற, துணை நகரங்களில் அதிகம் வளர்ச்சியுறாத முதலாளித்துவ கூறுகளை எவ்வாறு தனது நகர்ப்புற முதலாளிய வலைப்பின்னலின் மையமாகக்கொண்டு வருவது என்ற கேள்வி வருகிறது. இதைக் களைவதற்கான உத்திகளை இந்த அரசானது, கடந்த பல காலமாக முயற்சித்து வருகிறது.

கடந்த காலங்களில் ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்’தின் ஊடாகவும், தற்போது பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா திட்டத்தின் ஊடகாவும், உதிரியாக அமைப்பிற்கு வெளியே, வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் வராத ஒவ்வொரு குடிமகனையும் மையப்படுத்தப்பட்டுள்ள நிதி மூலதன வலையத்திற்குள்ளாக கொண்டு வர முயற்சித்து வருகிறது.

கடந்த அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பன்னாட்டு நிதியகத்தின் கூட்டத்தில், இந்தியாவின் பன்னாட்டு நிதியகப் பிரதிநிதி அருண் ஜெட்லி வழங்கிய அறிக்கை இதை மெய்ப் பிக்கிறது. பன்னாட்டு நிதியகத்தின் நிதிக் கமிட்டியிடம் வழங்கிய அறிக்கையின் ஆறாவது பக்கத்தில், அருண் ஜெட்லி கூறுவதாவது, “கடந்த 2014ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு இந்தியக் குடும்பங்களையும் இந்தியாவின் நிதிப் பரவலில் சேர்த்துக் கொள்ளும் வகையில் பிரதம மந்திரி ஜன் தன் யோஜனாத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலமாக 24 கோடி புதிய வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன” என்கிறார்.

பாஜக அரசின் இந்த நடவடிக்கையை முன்னால் ரிசர்வ் வங்கி இயக்குனர் விமர்சித்து வந்தார். கிராமப்புறங்களில் வங்கிகளின் திணிப்பை செயற்கையான வகையில் மேற்கொள்ளா மல், வங்கிகளின் தேவை மீதான பண்பு மாற்றத்தை மக்களிடம்

கொண்டு வரவேண்டும் என வற்புறுத்தினார். அப்போதே அதன் தேவை நிறைவுறும் என்றார். இந்தக் கூற்று ஒருகட்டத்தில் உண்மையாகியது. பாஜக அரசால் வேகமாக துவங்கப்பட்ட/ திணிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் ஒன்றில்கூட மக்கள் பணத்தைப் போடவில்லை. மாறாக ஆளும் அரசோ தானாக வங்கிக் கணக்கில் பணம் போடுகிறேன் என அந்தப் பணத்தை ஊழல் செய்யவும் பயன்படுத்தினார்கள்.

தற்போது விஷயத்திற்கு வருவோம், ரூபாய் நோட்டு செல்லாது என்ற மோடியின் அறிவிப்பிற்குப்பின் வங்கியில் கணக்கு வைத்திருப்பது என்பது ஒவ்வொரு குடிமகனின் தவிர்க்க இயலாத கடமை என்ற கருத்துருவாக்கம், கிராம சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. செல்லாத ரூபாய் நோட்டுகளை மாற்று வதற்கு வங்கிக் கணக்கின் அவசியம் பாரீர் என்ற கருத்தியில் மேலாண்மையை கிராம சமூகத்தின் பொதுப் புத்தியில் ஊடுரு வலைச் செய்கிறது. உதிரிப் பிரிவினர் அனைவரும் வங்கிகள் எனும் மையக் கட்டுப்பாட்டில் வரவைக்கப்படுகின்றனர். மூலதனம் குவிமையப்படுத்தப்படுகிறது.

சாலையோர வியாபரிகள், குறு சிறு வணிகர்களுடன் சுற்றில் இருக்கும் ரொக்கப் பணப் புழக்கம் இதன் ஊடாக அகற்றப்படும். அதேநேரத்தில் பணப் புழக்க சுற்றோட்டத்தில், ரொக்கப் பணமானது கையிருப்பாக கைகளில் தேங்குவதை அகற்றிவிடுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தி அளவில் (GDP) சுமார் 50 விழுக்காடு அளவிற்கு சிறு குறு வியாபாரம், விவசாயம் போன்ற முறைசாரா பொருளாதாரத்தையே சார்ந்துள்ளது. இந்தப் பாணியிலான வியாபாரம், பணப் பரிமாற்றம், வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் வாராமல் வெளியே நடைபெறுகிறது. மக்களின் சேமிப்பும் இதில் அடங்கும். வங்கிகளின் கட்டுப் பாட்டு வளையத்திற்குள் வராத, இந்தப் பொருளாதார அமைப்பின் கண்காணிப்பில் வராத, சந்தைச் சுற்றோட்டத்தில் உள்ள ரொக்கப் பணத்தை எவ்வாறு நிலவுகிற முதலாளியப் பொருளாதார அமைற்குள்ளாகக்கொண்டு வருவது என்ற கேள்வி வங்கிகளுக்கு வருகிறது. அதாவது ஆளும் வர்கத்திற்கு வருகிறது.

ரூபாய் நோட்டு செல்லாது என்ற மோசடி அறிவிப்பின் ஊடாக, முறைசாரா துறையில் (informal sectors) புழங்குகிற பெரும் பணமானது வங்கிக்கு இருப்பாக, வரவாக வருகிறது. அறிவித்தபின் தற்போது வங்கிகளின் வைப்பு நிதி நான்கு

லட்சம் கோடியைத் தாண்டிவிட்டது. வங்கிகளில் கணக்குத் தொடங்கு வதும் அதிகரித்துள்ளது.

ஆக, இந்த அறிவிப்பின் பின்னாலான முதலீடுகளின் காரணமாக, வங்கிகளின் கண்காணிப்பில் கட்டுப்பாட்டு வளையத்திற்குள் வராத, முறைசாரா துறையில் புழங்குகிற பணமானது எதிர்காலத்தில் கட்டுப்பாட்டில் வந்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் தள்ளியுள்ளது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்போக்கின் முக்கிய பண்பு மாற்ற நிகழ்வான ஏகாதிபத்திய கட்டத்தில் நூறாண்டுகளுக்கு முன்பாக பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வங்கி மூலதன திரட்டலை தற்போதுதான் இந்திய ஆளும் வர்க்கம் மேற்கொள்கிறது. நிற்க.

நகரை பொறுத்துவரை இந்த நெருக்கடி காலகட்டத்தில் (ரூபாய் நோட்டு செல்லாது) வேறொரு கருத்தியல் தாக்குதலை அரசு நிகழ்த்துகிறது. அதாவது, புழக்கத்தில் உள்ள ரொக்கப் பண வடிவிலான பொருள் பரிவர்த்தனைக்கு மாற்றாக, பணமற்ற வடிவிலான வைப்பு/பற்று/ஆன்லைன் வர்த்தகத்தை பயன்படுத்த நிதி அமைச்சர் அருண் ஜெட்லி அறிவுறுத்தி வருவதையும் இதோடு இணைத்துப் பார்ப்பது அவசியமாகிறது.

## 3. பணமற்ற பரிவர்த்தனைக்கு மக்களைத் தள்ளுவது

நாம் மேற்குறிப்பிட்டபடி, இந்தியாவில் சுமார் 95 விழுக்காடு மக்கள் தங்களது அன்றாட செலவுகளுக்குப் பணத்தையே பயன்படுத்துகின்றனர். தொழில்துறையில் வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, தென்கொரியா போன்ற நாடுகளில் பெரும்பாலான பரிவர்த்தனைகள், பணமற்ற வகையிலான வைப்பு அட்டை, பற்று அட்டை மூலமாகவே நடைபெறுகிறது. இந்திய அரசோ, வளர்ச்சியை முடுக்கிவிட்டு, அதன் மூலமாக மக்களின் வேலைவாய்ப்பை, பொருளாதாரத்தை உயர்த்தாமல், நேரடியாக மேற்கத்திய நாடுகளின் பாணியைப் பிரதியெடுத்து இந்தியாவில் அமல்படுத்த முயற்சிக்கிறது. அதாவது நடைமுறையில் அரை தொழில்மய நாடாக இருக்கிற இந்தியா, வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளின் பாணியை கடை பிடிக்கத் துடிக்கிறது.

இந்த அறிவிப்பின் மூலமாக பணப் பரிவர்த்தனை யில் உள்ள சிறு குறு வியாபாரிகளை சந்தையில் இருந்து அப்புறப்படுத்துகிறார்கள். சமூகத்தின் பொதுப் புத்தியில் பணமில்லா பரிவர்த்தனைகள் (online வர்த்தகம்) குறித்த அக்கறையை, கவனத்தை வலுக்கட்டாயமாக திணிக்கிறது. இந்தப் பணத்தட்டு பாடு கட்டத்தில், கடன் அட்டை பரிவர்த்தனை, மின்னணு பரிவர்த்தனையை நோக்கி மேல்தட்டு வர்க்கத்தின் கவனம் செல்லும். சிறு, குறு சில்லறை வியாபாரிகள்

ரொக்கப் பணப் புழக்கம் இல்லாத காரணத்தால் சந்தையில் இருந்து தாமாக வெளியேறு வார்கள்.

நவம்பர் 8ஆம் தேதி அறிவிப்பிற்கு அடுத்தநாள் காலையில் paytm*[3] நிறுவனத்தின் பணமில்லா வர்த்தக இந்தியாவை படைப்போம் என்ற வாழ்த்து மற்றும் விளம்பரச் செய்தியில், பல்லைக் காட்டியபடி மோடி போஸ் கொடுப்பதை இந்தப் பின்னணியில் இருந்துதான் பார்க்கவேண்டும்.

---

3 2015ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கியில் இருந்து பேமன்ட் வங்கி உரிமையை paytm நிறுவனம் பெறுகிறது. அதாவது, சேமிப்பு நிதி, பற்று அட்டை போன்ற புதிய பணமற்ற முறையிலான வர்த்தகத்திற்கான உரிமையைப் பெறுகிறது. அதாவது அலைபேசி, சினிமா டிக்கட், ரயில், பேருந்து, வானூர்தி டிக்கட், தண்ணீர் கட்டணம் என அனைத்தும் செய்யலாம். ஏன் தங்கம் கூட வாங்கலாம். இந்த உரிமையைப் பெற்ற முதல் நிறுவனம் இதுதான். Paytm நிறுவனத்தை தொடர்ந்து தற்போது airtel போன்ற பல பணமில்லா வர்த்தக நிறுவனங்களுக்கு இந்திய அரசு அனுமதி வழங்கி ஊக்கமளித்துவருகிறது.

## 4. இந்த நடவடிக்கையால் எந்த வர்க்கத்தின் நலன் பறிக்கப்படுகிறது?

**சிறு நடுத்தர வணிகர்கள்,விவசாயிகள்:**

*முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில், குறிப்பாக முதலாளித்துவத்தின் ஏகபோக கட்டமான ஏகாதிபத்திய கட்டத்தில், சிறு வணிகர்களைப் பெரும் ஏகபோக முதலாளியம் விழுங்குகிறது. வளர்ந்த மேற்குலக நாடுகளில் — 1900களில் இவ்வாறாக சிறு வணிகர்கள், வளர்ந்த ஏக போகங்களால் நசுக்கப்பட்டனர். நாம் மேற்குறிப்பிட்டபடி, இந்தியாவில் அது தற்போது தான் நடைமுறைக்கு வருகிறது.*

*வால்மார்ட், ரிலையன்ஸ்ஃபிரெஷ் போன்ற பெரும் ஏகபோக நிறுவனங்கள் ரொக்கப் பண பரிவர்த்தனையின் மூலமாக வணிகத்தில் ஈடுபட்டு வருகிற லட்சக்கணக்கான சிறு வணிகர்களை விழுங்கி ஒழித்துக்கட்டும். பெரும் பலத்துடன் உள்ள ஏகபோக நிறுவனங்களுக்கு முன்னால் தாக்குப்பிடிக்க இயலாமல் சந்தையில் இருந்து சிறு வணிகர்கள் விலக வேண்டிய நெருக்கடி உருவாகும். முதலாளித்து வத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் சிறு உடமையாளராக இருந்த இந்த வர்க்கங்கள், கூலிக்கு உழைப்பை விற்கிற பாட்டாளியாக மாறுவார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் இருந்து மேற்கோள் காட்டுவதென்றால்*

***“நடுத்தர வர்க்கத்தின் கீழ்த்தட்டுகளைச்***

***சேர்ந்தவர் களான சிறிய வணிகர்கள், கடைக்காரர்கள், பொதுவாகப் பரந்த வணிகத் தொடர்புகளின்றிக் குறுகிய அளவில் வணிகம் செய்வோர், கைவினைஞர்கள், விவசாயிகள் இவர்கள் அனைவரும் படிப்படியாகத் தாழ்வுற்று பாட்டாளி வர்க்கத்தில் கலந்துவிடுகின்றனர். அவர்களின் சொற்ப மூலதனம் நவீனத் தொழில்துறையின் வீச்சுக்கு ஈடுகொடுத்துத் தொழில் நடத்தப் போதாமல், பெரிய முதலாளிகளுடனான போட்டியில் மூழ்கிப் போய்விடுவது ஒரு பாதிக் காரணமாகும். அவர்களுடைய தனிச்சிறப்பான திறமைகள் புதிய உற்பத்தி முறைகளால் மதிப்பற்றதாகி விடுவது மறுபாதிக் காரணமாகும். இவ்வாறாக, மக்கள் தொகையின் அனைத்து வர்க்கங்களிடமிருந்தும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆட்கள் சேர்கின்றனர்."***

*(கம்யூனிஸ்டு அறிக்கை, அத்தியாயம்—1)*

**கிராமப்புற விவசாயிகள்:**

*நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான பிளவுகள் இந்தக் கட்டத்தில் கூர்மையடைகின்றன. கிராமங்கள் நகரங்களின் முதலீடுகளுக்காக வேகமான வகையில் சுரண்டப்படும்.*

*ஒரு புறம் நகரத்தில் குவிமயப்படுத்தப்பட்டுள்ள தொழில் துறை, சேவை மூலதனம் வடிவிலான முதலாளித்துவ வளர்ச்சி, முதலாளித்துவ பண்புடன் கூடிய சமூக உருவாக்கம் எனவும்,*

*மறுமுனையில் கிராமத்தில் பின்தங்கிய உற்பத்தி உறவு களின் நெருக்கடி, கிராமப் பொருளாதார புறக்கணிப்பால் நெருக்கடிக் குள்ளாகிற விவசாயத் தொழிலாளிகள். கிராமத்தில் அதிகரிக்கிற வறுமை, நகரத்தில் பணமற்ற பரிவர்த்தனை முடுக்கம், நகரத்தில் ஸ்மார்ட் சிட்டி, புல்லட் ரயில், கிராமத்தில் தற்கொலைகள் எனவும் உலக வரைபடத்திலேயே இல்லாத ஒரு ஏற்றத்தாழ்வுமிக்க நிலப்பரப்பாக இந்தியா மாறிவருகிறது. இந்திய நகரங்களுக்கும் கிராமங்களுக்குமான அரசியல்—பொருளி யியல் முரண்பாடு கூர்மைபெற்று வருகிறது. விவசாயத்தை கைவிட்டுவிட்டு நகரத்தில் பாட்டாளிகளாக உருமாறுகிற போக்கு தீவிரமடைந்து வருகிறது. இந்தியாவில், நவதாராளமய அமலாக்கத்திற்குப் பிந்தைய 25 ஆண்டுகளில் மட்டும் சுமார் நான்கு லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதை இந்தப் பின்புலத்தில் இருந்துதான் பார்க்க வேண்டும்.*

*ஆக கிராமத்தில் விவசாயி வர்க்கம், நகரத்தில், துணை நகரங்களில் சிறு, குறு வியாபாரிகள், தொழில் முனைவோர்*

போன்ற இடைநிலை வணிக வர்க்கங்கள், இனி வங்கிகளை நம்பியே சேமிப்பு, சம்பளம் என வாழ்க்கை நடத்தவுள்ள பாட்டாளி வர்க்கத்தின் நலன் முழுதும் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில் பறிக்கப்படுகிறது.

ஒருமுனையில், வெளிநாடுகளுக்கு உபரி மூலதனத்தை ஏற்றுமதி செய்கிற வகையில் ரிலையன்ஸ், டாட்டா போன்ற பெரும் தொழில் குழுமங்கள் வளர்ச்சிபெற்று வருகிற இதே நாட்டில்தான் மற்றொரு பக்கம் விவசாயிகளின் தற்கொலைகளும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற உபரி மூலதனத்தின் ஒரு சிறு பங்கை விவசாயத்திற்கு பகிர்ந்தளித்தாலே நிலையை சீராக்க இயலும். ஆனால் அவ்வாறு செய்தால் அது முதலாளித்துவமாக இருக்க முடியாது அல்லவா?

## 5. ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்பு: இந்திய அரசுக்கும் பன்னாட்டு நிதியகத்திற்குமான முரண்பாட்டின் வெளிப்பாடா?

### அ. தேசிய அரசுகளுடனான பன்னாட்டு நிதியகத்தின் சமரசம்:

*பன்னாட்டு நிதியகம் என்பது உலகளாவிய அளவில் நிதி மூலதனங்களை கையாளுகிற அல்லது உலகமயமாக்கப்பட்ட நிதி மூலதன முதலீடு களுக்கு கொள்கை சார்ந்த, தகவல்கள் சார்ந்த ஆலோசனைகளை வழங்குகிற நிதி நிறுவனம் ஆகும். இதை வளர்ந்த பொருளாதார நாடுகள் இயக்குகின்றன. அதாவது ஐக்கிய அமெரிக்கா தலைமை வகிக்க அதன் பங்காளிகளான ஜப்பான், பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற ஏகாதி பத்திய நாடுகளின் மூலதனப் பரவல் நலன் சார்ந்து இயங்குகின்றன.*

*ஏகாதிபத்திய நாடுகளானது, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய சூழலில் தனது வழமையான நேரடிப் பாணியிலான சுரண்டல் போக்கை சுய ஆய்வு செய்யத் தொடங்கியது. தனது கடந்த காலத்தைய, நேரடியான காலனிய ஆதிக்க சுரண்டலானது, சுரண்டப்படுகிற நாடு களின் பெரும் தேசிய எழுச்சியை உண்டாக்கி, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் டசன் கணக்கில் தேச அரசுகளின் உருவாக்கத்திற்கு அடித்தளம் அமைத்ததை கவலையோடு பார்த்தது.*

இங்கிலாந்திடமிருந்து இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பிரான்சிடமிருந்து அல்ஜீரியா என தேச அரசுகளின் தோற்றத்தை உதாரணம் கூறலாம். சோவியத் ரஷ்யப் புரட்சியும், சீனப் புரட்சியும் சோசலிச முகாம் என்ற மாற்றை வழங்கிய சூழலில் புதிதாக உதயமாகியுள்ள இந்த நாடுகள், சோசலிச முகாமில் செல்லாமல் தடுப்பது ஏகாதிபத்திய சக்திகளுக்கு அவசியமாகியது.

அதேபோல உலகளவில் இரண்டாம் உலகப் போர் ஏற்படுத் திய பொருளாதார மந்த நிலையை எதிர்கொள்ள தொழிலாளி வர்க்கத்திடம் மிகப்பெரும் சமரசத்தையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. நல்ல கூலி கொடுத்து உற்பத்தியை முடுக்கிவிடத் தொடங்கியது. தனது வழமையான பாணியில் புதிய நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்தத் தொடங்கியது.

ஆக, இந்த சூழல், உலக வரலாற்றில் மிக முக்கியமான மூன்று முகாம்களை உருவாக்கியது. இந்த 1945—1970 கட்டத்தில்

- வளர்ந்த ஏகாதிபத்திய முகாம்
- ரஷ்யா, சீனா போன்ற சோசலிச முகாம்
- புதிதாக விடுதலை பெற்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் ஆகியன.

### ஆ. தேச புனரமைப்பும் பின்காலனிய பெருமுதலாளிய வர்க்கமும்:

நேரடி காலனியாதிக்கத்தில் இருந்து அரசியல் விடுதலை பெற்ற நாடுகளின், பொருளாதார கட்டமைப்பிற்கு, தேச புனரமைப்பிற்கு அந்நாடுகளின் முதலாளிய வர்க்கம் முக்கியப் பங்காற்றியது. அரசியல் அரங்கிலும் இந்த வர்க்கம் பெரும் செல்வாக்கு செலுத்தியது. இந்த சூழல் கடந்த காலங்களில் இல்லாத ஒன்று. ஏகாதிபத்திய சகாப்தத்தில் புதிய பண்பு மாற்றமாக இது நடந்தது. இந்த சூழலில் புதிதாக அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளின் தேச நிர்மாணத்திற்கு மூன்று வாய்ப்புகளை வழங்கின.

- அது சொந்தமாக தனது உள்நாட்டு முதலாளிகளின் கால்களில் நிற்பது
- சோசலிச முகாமை சார்ந்து இருப்பது
- வளர்ந்த ஏகாதிபத்திய முகாமை சார்ந்திருப்பது

இந்தியாவைப் பொறுத்தவரை பெயரளவில் அரசியல் சுதந்திரம் பெற்றாலும், பொருளாதார நலன்களுக்காகவும் இதர அரசியல் நலன்களுக்காகவும், ஏகாதிபத்திய முகாம்களிடையே பேரம் பேசுகிற சுதந்திரத்துடன் செயல்படத் தொடங்கியது.

இந்தியாவின் பெரு முதலாளிகள், உற்பத்தி சக்திகளை குறிப்பாக தொழில்நுட்ப ஆய்வுகளில், வளர்ச்சியில் முதலீடு செய்வதில் தயக்கம் காட்டினர். இதன் காரணமாக வளர்ந்த தொழில்நுட்பங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்து அதனால் பலன் பெறுகிற வகையில் தொழில்களை நடத்தினர். அறிவியல் தொழில்நுட்பங்களுக்கு ஏகாதிபத்திய முகாம்களையே இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம் சார்ந்திருந்தது. அதற்கேற்ற கொள்கை மாற்றங்களை மேற்கொள்ள அரசை வற்புறுத்தினர்.

இந்தியப் பெருமுதலாளிகளுக்கான சலுகைகள், மானியங்கள் அனைத்தும் கண்காணிப்பிற்கு அப்பாற்பட்டதாக மாறியது. துறை சார்ந்த முதலீடுகளை, வளர்ச்சிகளை மேற்கொள்கிற வகையில் சரியான திசை வழியை அரசு காட்டவில்லை.

இது தென் கொரியாவில் தலைகீழாக நடந்தது. மானியம் வேண்டுமென்றால் உற்பத்தி அளவிற்கும், வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும் உறுதி கூறவேண்டும். இது அரசின் தீவிர கண்காணிப்பில் நடைபெற்றது. தென்கொரியாவின் புவிசார் முக்கியத்துவம் கருதியும், கம்யூனிச ஆபத்தை அகற்றவும், அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகள், தென்கொரியாவில் நிலச் சீர்திருத்தத்தை முடித்துவைத்து, முழு முதலாளிய வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தனர்.

இந்தியாவிலோ, பழமையான நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளில் பெரும் மாற்றம் இல்லை. பெயரளவில் நிலச் சீர்திருத்தம் நடைபெற்றன.

மேற்கூறிய காரணத்தால் வழமையான மரபு ரீதியான முதலாளிகளின் ஆதிக்கமே இந்தியப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் பெற்றன. டாட்டா குழுமம் போன்ற வாரிசு முதலாளிகளே தலைமுறை தலைமுறையாக தொடர்ந்தனர்.

தொகுத்துக் கூறின், முதலீடுகளின் அதிகம் பாதிப்பில்லாமல், லாபத்தில் அதிக உத்திரவாதம் மிக்க — தொழில்நுட்பத்திற்கு மேற்குலகை சார்ந்த — நிலப்பிரபுத்துவதுடன் சமரசம் செய்து கொண்ட — அரசின் மானிய சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அரசுடன் ஒண்டிக்கொண்டே உபரியை உறுஞ்சுகிற — ஒரு மட்டமான, மந்தமான ஒட்டுண்ணி வர்க்கமாக இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம் உருப்பெற்றது. இதன் விளைவாக இன்றுவரை இந்திய ஒன்றியமானது, அரை—தொழில்மய கட்டத்திலேயே நீண்டகாலமாக தேக்கம் பெற்று நிற்கிறது. இந்தப் பின்புலத்தில் 80களின் இறுதியில் இந்திய பொருளாதாரம் எதிர் கொண்ட நெருக்கடியை புரிந்துகொள்ளவேண்டும்.

மேற்குறிப்பிட்ட காரணத்தால் இந்தியப் பெரு முதலா ளிய வர்க்கமானது, 1947—1990 வரை அந்நிய மூலதன ஊடுருவலை எதிர்க்கவும் இல்லை. உள்நாட்டில் வளர்ச்சியை சாத்தியப் படுத்தவும் இல்லை. மாறாக இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்திற்கு அடுத்த நிலையில் உள்ள இடைநிலை முதலாளிய வர்க்கமே, பன்னாட்டு மூலத்தின் ஊடுருவலை அரசியல் விடுதலை பெற்ற காலம்தொட்டு கண்டித்து வந்தது. இறையாண்மைக்கு எதிரானது என்றும், தங்களது தொழில் பாதிப்படைவது குறித்தும் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்தது. அது எவ்வாறாயினும் இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம் பெரும் ஒட்டுண்ணித் தனத்துடன் அரசின் அனைத்து சலுகை களையும் பெற்ற, வளர்ச்சிக்கு பயன்படாத உதவாக்கரை வர்க்கமாக வளர்ந்தது.

இதே காரணத்தால்தான், அது 90களில் அமலுக்கு வந்த தாராளமயத்தை எதிர்க்கவில்லை. மாறாக அந்நிய நிறுவனங்களின் முகவராக பெருந்தொழில் நிறுவனங்கள் கூட்டு வைத்துக் கொள்ளையடித்தன. இந்த இடத்திலும் பாதிக்கப் பட்டது என்னவோ இடைநிலை முதலாளிய வர்க்கமே.

### இ. தாராளமய கட்டத்தில் — இந்திய பெருமுதலாளி வர்க்கமும், பன்னாட்டு மூலதனமும்:

உலகளாவிய அளவில் 1975—90 கட்டத்தில் உலகின் ஒட்டு மொத்த உற்பத்தி சக்திகளும், நிதி மூலதனமும் குவிமையப் படுத்தப்பட்டன. மூலதனம் ஒன்று குவிக்கப்பட்டன (இதன் விளைவே இன்றளவில் விரைவான பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டு வருகிறது. இதற்குள்ளாக நாம் இப்போது செல்லப் போவதில்லை) ஒன்று குவிக்கப்பட்ட மூலதன ஏற்றுமதிக்கான சந்தையை ஒழுங்கமைத்துத் தருவதில் பன்னாட்டு நிதியகம் முக்கிய பங்காற்றியது. பன்னாட்டு நிதியகம் உருவாக்கிய காலம்தொட்டு கடந்த ஐம்பது ஆண்டுகளில், பெரிய செயல்பாடுகள் இல்லாத சூழலில் மீண்டும் 90களில் அது முக்கியத்துவம் பெற்றது.

வளர்ச்சி பெற்று வருகிற இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் ரிசர்வ் வங்கி ஆளுநர்கள் முக்கிய இடத்திற்கு வந்தனர். இந்த நாடுகளின் ரிசர்வ் வங்கி ஆளுநர்கள், நிதி அமைச்சர் பன்னாட்டு நிதியகத்தின் பிரதிநிதியாகினர்.

(பெயரளவிலான) தேச அரசுகளின் உருவாக்கத்தின் காரண மாக, 1945—75 காலத்தில் மண்ணுக்கு அடியில் புதைந்து உயிரை மட்டும் பிடித்து வைத்துக்கொண்டு இருக்கிற தவளையின்

ஹைபெர்நேசன் மோடில் இருந்த ஏகாதிபத்திய மூலதனம், அதன் முகவரான பன்னாட்டு நிதியகம் 80களுக்கு பின்பு, புலி போல மூன்றாம் உலக நாடுகளில் பாய்ந்தது. அதை SAP இன் ஊடாக செய்தது. அதாவது structural adjustment program. கட்டமைப்பு மாற்றம். அதாவது பன்னாட்டு மூலதனத்திற்கு ஏற்ப உள்நாட்டு சந்தையை அனுசரித்து அடிபணிய வைப்பது.

80களின் பொருளாதார நெருக்கடி கட்டம் உலகப் பொருளாதார திசைவழியை மாற்றியது. ஏகாதிபத்திய நாடுகளின் மூலதன ஊடுருவல் மூன்றாம் உலக நாடுகளில் வேகமாகப் பாய்ந்தது. இந்திய சந்தைகள் பன்னாட்டு மூலதனத்திற்கு திறந்துவிடப்பட்டன. அரசின் வசமிருந்த உள்நாட்டு சந்தைகள் தனியாருக்கு விடப்பட்டன. இந்திய வங்கிகளில் தனியார் மூலதனம் பாய்ந்தது. தனியார் வங்கிகள் முளைத்தன. முன்னெப் போதும் இல்லாத வகையில் நிதி மூலதனம் இந்திய வங்கிகளில் திரட்டப்பட்டது. வங்கிகள், உலக நிதி மூலதனத்தை கையாள்கிற முக்கிய இடத்திற்கு வந்தது. ரிசர்வ் வங்கியின் கவர்னர்கள் முன்னுக்கு வந்தனர்.

தாராளமய கட்டத்தில் இந்தியப் பெரு முதலாளியத்திடம் ஒரு முக்கியப் பண்பு மாற்றமும் நிகழத் தொடங்கியது. அதாவது அதுவரையிலும், குறிப்பான சில துறைகளில் பல முதலாளிகள் இருந்த இடத்தில் இருந்து பல துறைகளில் சில ஏகபோக முதலாளிகள் ஆதிக்கம் செய்கிற போக்குகளும், இந்தியப் பெரு முதலாளிகள் பெரும் ஏகபோக சக்திகளாக வளர்சியுருகிற போக்கும் அதிகரித்தன.

ரிலையன்ஸ் தொழில் குழுமமானது பெட்ரோ கெமிக்கல், எண்ணெய், சில்லறை வர்த்தகம், இயற்கை எரிவாயு, தகவல் தொடர்பு என எண்ணற்ற துறைகளில் கால்பதித்து வெளிநாடு களுக்கு தனது மூலதனத்தை ஏற்றுமதி செய்கிற அளவிற்கு ஏகபோக சக்திகளாக வளர்ச்சி பெற்றது. இதேபோல டாடா நிறுவனமானது சுமார் 80 நாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனத்தை அமைத்துள்ளது. இதேபோல எஸ்ஸார் குழுமம், அதானி குழுமம், வேதாந்தா குழுமம் போன்ற பெரும் ஏகபோக தொழில் குழுமங்கள் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் தனது வலைப்பின்னலை அமைத்துள்ளது. மூலதனத்தை ஏற்றுமதி செய்கிறது. இச்சூழலில், பிராந்திய மட்டத்திலும் சில ஏகபோக நிறுவனங்கள் குறிப்பான துறைகளை கட்டுப்படுத்தி வளர்ச்சி பெற்றன. (உதாரணமாக வைகுண்டராஜனின் தாது மணல் ஏற்றுமதி!)

தாரளமயமாக்கல்,வளர்ந்த தொழில்துறை நாடுகளின்

ஏகபோக நிறுவனங்களின் உபரிப் பெருக்கத்திற்கு ஆதரவாக அமைந்ததோடு வளர்ந்து வருகிற நாடுகளான இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகளிலும் சில ஏகபோக சக்திகளை உருவாக்கின. டாட்டா குழுமம் ஐரோப்பிய நாடுகளின் தொழில்களைக் கைப்பற்றுகிற அளவுக்கு அதன் நிதிமூலதன பலம் பலமடங்கு பெருகியது. ஏர்டெல் பாரதி, கோத்ரேஜ், இன்போசிஸ் போன்ற நிறுவனங்கள் இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் தொழில்களை கைப்பற்றியது. 90களுக்கு முன் சிறு நிறுவனமாக இருந்த ஜிண்டால் இன்று உருக்கு மற்றும் ஆற்றல் துறையில் ஆதிக்கம் செய்கிற பெரும் தொழில் குழுமமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அதேபோல 90களுக்கு முன் அடிச்சுவடுகூட தெரியாமல் இருந்த ஸ்டெர்லைட் நிறுவனம் இன்று அலுமினியம், காப்பர் ஏற்றுமதியில் பிர்லாவை பின்னுக்குத் தள்ளி முன்னேறியுள்ளது. அதாவது, தாரளமயமாக்கல் கட்டத்தில் பிர்லா போன்ற பழைய ஏகபோக சக்திகள் சிலவற்றை புதிய ஏகபோக சக்திகள் பின்னுக்குத் தள்ளின. டாட்டா போன்ற சில பழைய ஏகபோக சக்திகள், மேலும் வளர்ச்சியுற்று வெளிநாடு களில் வலைப்பின்னலை அமைத்து பெரும் ஏகபோக தொழில் குழுமமாக வளர்ச்சி பெற்றன.

இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய சூழலில், மூன்றாம் உலக நாடுகளின் பெரு முதலாளிய வர்க்கத்திடம் ஏற்பட்ட இம்முக்கிய பண்பு மாற்றமானது கவனத்திற்குரிய இடமாகும்.

இந்த கட்டத்தில் ரிசர்வ் வங்கியைப் பொறுத்தவரை, இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்திற்கும் தனது நிதிமூலதன நிர்வாகத்திற்கும் இடையே அரசு பெரிய சீனச் சுவரை கட்டி எழுப்பிக் கொள்ளவில்லை. மாறாக பாலும் நீரும் கலந்தது போன்ற உறவையே ரிசர்வ் வங்கி ஆளும் வர்க்கத்துடன் பேணியது.

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவின் பொதுத்துறை வங்கிகள் இந்தியப் பெரு முதலாளிகளுக்கு வழங்கிய கடன்கள், இந்திய வங்கிகளை திவால் நிலைமைக்குள் தள்ளியுள்ளதை பார்த்தோம். இதைக் கண்காணித்த பன்னாட்டு நிதியகம், இந்திய வங்கிகளைப் புனரமைக்கக் கோரியது. ஏனெனில் இந்திய வங்கிகளின் நெருக்கடி நிலை, பன்னாட்டு மூலதனப் பரவலாக்கத்திற்கு தடையாக அமையும் அல்லவா? அதேபோல பாஜக அரசின் வலது பாசிச போக்கையும் ரகுராம் ராஜன் நெருடலாகவே பார்த்துவந்தார்.

ஏனெனில் நாட்டில் முதலாளித்துவமும் ஜனநாயகமும்

இணைந்து ஒருவித சமரச சீர்திருத்தப் போக்கை அரசியல் தளத்தில் மேற்கொள்ளவேண்டும் என்பது ராஜனின் விருப்பம். பன்னாட்டு நிதியகக்கொள்கை அமலாக்கத்திற்கான முக்கிய முன் நிபந்தனையாக 'அரசியல் ஸ்திரத்தன்மை' அமைய வேண்டும் என்பது அதன் உள்ளார்ந்த அர்த்தமாகும். இஸ்லா மியர்கள், தலித்துகளுக்கு எதிரான ஆளும் மோடி அரசின் 'சகிப்புத் தன்மையற்ற' போக்கை ராஜன் விமர்சித்ததாகட்டும், வலுவான ஜெர்மனி அமைப்பதாக சொல்லிய ஹிட்லர் இறுதியில் ஜெர்மனி நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றது என்ற கருத்தின் ஊடாக மோடி அரசை மறைமுகமாக விமர்சிக்கிற இடமாகட்டும், ரகுராம் ராஜனின் கவலைகள் பன்னாட்டு நிதியகக் கொள்கையை அமல்படுத்துவதற்கு ஏற்ற, பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்கிற போக்கிற்கு ஏற்ற அரசியல் ஸ்திரத் தன்மையை தக்கவைப்பது என்ற அர்த்தத்தில் வெளிப்படுவதாகும். பெரு முதலாளிகளின் உடனடி சூறையாடலைவிட அடுத்த இருபது ஆண்டுகளுக்கு தனது மூலதனத்தை முதலீடு செய்கிற சந்தைக்கான சூழலை உருவாக்க முனைவதே பன்னாட்டு நிதியாதிக்க கொள்கையாளர்களின் கவலை. அது கடந்தகால அனுபவத்தை கணக்கில் கொண்டும் கம்யூனிச பூதத்தை கவனத்தில் கொண்டும் மெல்ல முன்னேற முயல்கிறது.

காங்கிரஸ் கட்சியின் தாராளமயக் கொள்கை நடைமுறைக் கும் பாஜக அரசின் தாராளமயக் கொள்கைக்குமான வேறுபாடு தாராளமயக்கொள்கைகளை அமல்படுத்தவதில் கையாள்கிற உக்திகளின்பாற்பட்டதாகும். அதாவது இரு கட்சிகளும், பன்னாட்டு நிதியாதிக்க கும்பலை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பதில் வேறுபடுவதில்லை. மாறாக, பன்னாட்டு நிதியகக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் காங்கிரசுக்கும் பாஜகவிற்கும் சில நடைமுறை வேறுபாடுகள் உள்ளன. அதாவது தாரளமயமாக்கலை மெதுவாக சீர்திருத்தம் செய்வது, தாரளமயமாக்கலால் மேலதிகமாக புறக்கணிக்கப்படுகிற கிராமப் பொருளாதாரத்தை, ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற பொதுத் திட்டங்களால் சரிக்கட்டுவது என சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்குவதில் காங்கிரஸ் கட்சி அக்கறை செலுத்தியது. கடந்த 2004—09 காங்கிரசின் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தேசிய ஆலோசனைக் கவுன்சிலை இந்த நோக்கத்திற்காகத்தான் காங்கிரஸ் உருவாக்கியது. இந்த கவுன்சிலின் ஆலோசனைகளின் பெயரிலேயே தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டன. உணவுப் பாதுகாப்பு மசோதாவும் அதன்

தொடர்ச்சிதான். பாஜகவோ, காங்கிரசின் இத்திட்டங்கள், மக்களுக்கு பிச்சை அளிப்பதென கடுமையாக விமர்சித்தது. வேலை வாய்ப்புகளை உருவாக்குற வகையில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்க வேண்டுமே தவிர இவ்வாறு பிச்சை வழங்கக்கூடாது என 2014 தேர்தலில் பாஜக பேசியது. ஆனால் ஆட்சிக்கு வந்து மோடி என்ன செய்கிறார்? அம்பானிக்கும், அதானிக்கும் மானியம் என்ற பெயரில் பாரிய அளவில் நிதிப் பிச்சைதான் வழங்குறார். வேலை வாய்ப்பு பெருகியதா எனக் கேட்டால், ஆம் அது நம் கண்களுக்கு புலப்படாதவாறு பெருகியுள்ளது என்கிறார். ஆனால் புள்ளி விவரங்கள் சேகரிப்ப வர்களின் கண்களுக்குத்தான் இது புலப்படவில்லை போலும்!

வேலை வாய்ப்புகள் உருவாக்குவது என்பது பெருமுதலாளி களுக்கு கடன் வழங்குவதை அதிகரித்தலில் மட்டுமே நடைபெறக் கூடிய மந்திரக் காரியம் அல்ல. மின்சார வசதி, சாலை வசதிபோன்ற உள்கட்டுமான அம்சங்களும் இதில் முக்கியப் பங்காற்றுகிறது.ஆனால் இதில், எதிலும் பாஜக அரசு முனைப்பு காட்டுவதாகத் தெரியவில்லை. அதேபோல சுகாதாரம், கல்வி துறைகளிலும் பாஜக அரசின் அக்கறையின்மை வெளிப்பட்டு வருகிறது. ஆட்சிக்கு வந்த இரண்டரை வருடத்தில் ஊரக வளர்ச்சிகோ, இடைநிலை முதலாளிய சக்திகளுக்கோ எந்த முன்னேற்றத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை மேலதிக மாக உள்நாட்டு சந்தையை பன்னாட்டு மூலதனத்திற்கு திறந்துவிடுவதும், இந்தியப் பெரு முதலாளிகளுக்கு மேலதிக கடன்களை வழங்குவதும் தொடர்கிறது.

உலகப் பொருளாதார வலைப்பின்னலில் அமெரிக்காவிற் கான சேவைத்துறை ஏற்றுமதியில் தடை ஏற்பட்டாலோ அல்லது குறைவான கூலிக்கு பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு அமெரிக்காவின் சேவைத்துறை மாறிச் சென்றாலோ, இந்தியப் பொருளாதாரம் ஆட்டம் காணும் என ஆளும் பாஜக உணர வில்லை. இதை பன்னாட்டு நிதியகத்தின் பிரதிநிதி ராஜன் உணர்ந்தே இருந்தார்.

இந்தப் பின்புலத்தில்தான் இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்திடம் இருந்து வரவேண்டிய வாராக் கடனை வசூலிக்க ராஜன் ஆர்வம் காட்டிய அம்சத்தையும், பின்னர் சுப்ரமணிய சாமியால் ராஜன் விமர்சிக்கப்பட்டதும், வெளியேற்றமும், உஜ்ஜர் பட்டேலை புதிய ரிசர்வ் வங்கி ஆளுநராக நியமித்ததும், வட்டி விகிதத்தை குறைத்ததும், செல்லாக்காசு அறிவிப்பை நேரடியாக மோடி அறிவித்ததையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். குறிப்பாக ராஜனுக்கும் நிதி அமைச்சகத்திற்கும் எழுந்த முக்கிய முரண்பாடுகளாக முறையே

- ரெப்போ வட்டி விகிதத்தை குறைக்கக் கோரிய நிதி அமைச்சகத்தின் கோரிக்கையை ராஜன் ஏற்க மறுத்தது.
- நிதியமைச்சகம் முன்வைத்த "நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை" சட்டத் திருத்தத்தை FRBM Act ராஜன் நிராகரித்தது.
- வாராக் கடனை வசூலிக்க ராஜன் நடவடிக்கை எடுப்பதை பாஜக அமைச்சர் நிதின்கட்கரி முதல் நிதி அமைச்சகம் வரை நெருடலாகப் பார்த்தது.

இந்த சூழலில்தான், ரகுராம் ராஜன் ஓர் அமெரிக்க ஏஜென்ட், அவர் மனதளவில் அமெரிக்கராக உள்ளார் என்ற தாக்குதலை சுப்ரமணிய சாமி தொடுத்தார். மாறாக, பிரதம மந்திரியின் நிதி ஆயோக் திட்டத்தின் முக்கியப் பொறுப்பாளராக அமெரிக்காவின் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பயின்ற அரவிந்த் பனகாரியாவை நியமிக்கப்பட்டுள்ளதை அறியாத வரல்ல சாமி. மேலும் மாண்டேக் சிங் அலுவாலியா முதல் அரவிந்த் சுப்பிரமணியம் வரை பன்னாட்டு நிதியகம் — உலக வங்கி முகாம்களில் இருந்து வந்தவர்களே, பாஜக அரசின் கொள்கை வகுப்பில் தலையீடு செய்பவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் சாமி அறியாதவரல்ல. எனவே சாமியின் 'வெளிநாட்டவர்' என்ற தாக்குதல், அரசியல் தளத்தில் ராஜனுக்கு எதிராக தொடுக்கப் பட்ட பாஜகவின் முக்கிய 'நகைச்சுவை மிக்க' அஸ்த்திரமாகும்.

ஆக, அரசை சார்ந்துள்ள ஒட்டுண்ணித் தனமான இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்தின் போக்கிற்கும் பன்னாட்டு நிதியகத்தின் நிதிக் கொள்கைக்குமான அமலாக்கத்தில் என்ன விதமாக முரண்பாடுகள் (இந்த முரண்பாடானாது மோதலாக வெளிப்படாமல், நிர்ப்பந்திப்பது, பேரம் பேசுவது, சமரசம் செய்து கொள்வது என்ற தன்மைகளில்) எழுகின்றன, அது அரசியல் தளத்தில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். தாரளமயமாக்கலுக்கு பிந்தைய சூழலில் புதிதாக எழுந்துள்ள இந்திய ஏகபோக சக்திகளுக்கும், பன்னாட்டு ஏகபோக சக்திகளுக்கும், ஆளும் அரசுக்கும், வங்கிகளுக்கும் இடையிலான ஊடாட்டங்களை ஆய்வு செய்யவேண்டும்.

குறிப்பாக இந்திய ஏகபோக சக்திகள் பிரேசில், சீனா, தென் அமெரிக்க ஏகபோக மூலதன சக்திகளுடன் என்ன உறவைப் பேணுகிறது, பன்னாட்டு நிதியாதிக்க கும்பலுடன் என்ன உறவைப் பேணுகிறது என்பதை ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

## 6. பாஜக அரசின் அறிவிப்பு, பொருளாதார நெருக்கடி நிலைக்கான முன்னோட்டத்தின் வெளிப்பாடா?

இந்தியப் பெரு முதலாளி வர்க்கத்தின் ஒட்டுண்ணிப் பண்பும் இந்தியப் பொருளாதாரமும் பின்னிப்பிணைந்தவை.

நாம் மேற்கூறியபடி, காலனியாதிக்க சூழலில் இருந்து அரசியல் விடுதலை பெற்ற ஐக்கிய இந்தியக் குடியரசின் பொருளாதாரக் கொள்கையானது, வளர்ந்த நாடுகளின் தொழில் நுட்பம் மற்றும் இயந்திர சாதனங்களுக்காக, வெளிநாடுகளில் இருந்து இறக்கு மதி சார்ந்த — இறக்குமதி பாணியிலான தொழில்மயக் கொள்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது (Import Substituted Industrialization).

அதேவேளையில், இந்தியப் பெருமுதலாளிய வர்க்கமோ, அதிக முதலீடு, ஆபத்தில்லாத — பாது காப்பான சந்தையுடன், விரைவான வகையில் லாபம் தருகிற வர்த்தகத்திலேயே தொடக்கம் முதல், ஆர்வம் செலுத்தியது. இந்தப் பண்புகளின் காரணத்தாலேயே இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்தை 'துணியாத முதலாளிகள்' (Riskless capitalist) என ரகுராம் ராஜன் அழைத்தார். பெரும் மூலதன முதலீடுகள் செய்து தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்கும், நிலச்சீர்திருத்தம் மேற்கொண்டு தொழில்மயத்தை பெருக்கவும் அது விரும்ப வில்லை. பெரு முதலீடுடைய ஆற்றல், உள்கட்டமைப்பு தேவைக்கு அது அரசின் நிதி முதலீட்டை கோரியது.




*வர்த்தக வீதத்தின் சரிவு*

இந்தியாவில் தொழில்மய வளர்ச்சியானது, இவ்வாறான எதிர்த்திசைப் போக்கில் பயணத்தை தொடங்கியது. சலுகை, மானியம் என அனைத்து உதவிகளையும், அரசிடம் பெற்றுக் கொண்ட இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம், தனது முதலீடு களைக் கண்காணிக்கிற அரசின் நடவடிக்கையை ஆரம்பம் முதலே விரும்பவில்லை.

எனவே தனது விருப்பத்தின் பெயரிலான முதலீடுகளைத் தொடர்ந்த இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம், நீண்டகால அடிப்படையிலான தொழில்மய முதலீடுகளுக்கு மாறாக குறைவான காலத்தில் லாபம் தருகிற துறைகளில் அதிக கவனம் செலுத்தியது.

மேலும், மேற்குலக நாடுகளின் உற்பத்தி தயாரிப்பிற்கான கச்சா பொருட்களை ஏற்றுமதி செய்வதைத் தாண்டி அது, முழு சரக்கை ஏற்றுமதி செய்கிற வகையில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உறுதியாக மேற்கொள்ளவில்லை.

உள்நாட்டு சந்தையை அரசின் உதவியோடு மேற்கொள்வது, தொழில்நுட்பத்திற்கு வெளிநாடுகளின் உதவியைப் பெறுவது என தனது வாணிப, நிலப்பிரபுத்துவ பண்புகளின் எச்சங்களை துடைத்தெறியாதப் பழமையான பிற்போக்கு குணாம்சமுடைய வர்க்கமாக தேச கட்டுமானத்தில் பங்களிப்பு செய்தது.

90களில் தாராளமயமாக்கல் கட்டத்திலும் 2008ஆம் ஆண்டுகால பொருளாதார மந்த கட்டத்திலும் இந்தியப்

பெரு முதலாளிகளின் இந்தப் பண்பு முழுதும் மாறவில்லை. பெரும்பாலும் உள்நாட்டு சந்தையை நம்பியுள்ள இந்திய பெரு முதலாளிகள் அந்நிய மூலதன சக்தியோடு போட்டி போட வேண்டுமென்றால் அரசின் நிதி உதவிகள் மேலதிக சலுகைகள் அவசியம் எனக் கோரியது.

இந்த சூழலில் தனது உள்நாட்டுப் பங்காளியைக் காக்க வேறு வழியில்லாமல், இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்திற்கு கடன் வழங்குகிற போக்கு அதிகரித்தது. 2008 முதல் 2013 வரையிலான காலகட்டங்களில் மட்டும் வழங்கப்பட்ட கடன் கள் சுமார் மூன்று லட்சம் கோடி ரூபாயைத் தொட்டது.

ஏற்றுமதி வர்த்தகத்தைப் பொறுத்தவரை கணினித் துறை, காப்பீடு போன்ற ஆபத்தில்லாத சேவைத் துறைகளில் மட்டுமே இந்தியப் பெரு முதலாளிய வர்க்கம் ஆர்வம் செலுத்தியது. இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகளவில் அமெரிக்காவை சார்ந்துள்ளது.

ஒட்டுமொத்த ஏற்றுமதியில் அமெரிக்காவிற்கு மட்டும் 16 விழுக்காடு ஏற்றுமதி செய்கிறது. இதில் ஐம்பது விழுக்காடு அளவிற்கு கணினி போன்ற சேவைத் துறை ஏற்றுமதியே பங்களிப்பு செய்கிறது.

சேவைத்துறை நீங்கலாக, உலக சந்தையில் போட்டி போடுகிற வகையில், சிறந்த தொழில்துறை பண்டங்களை (அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும்) ஏற்றுமதி செய்கிற வகையில் இந்தியப் பெருமுதலாளிய வர்க்கம் வளர்ச்சி பெறவில்லை. இதன் காரணமாகவே கடந்த பத்து ஆண்டுகளாக ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமான வர்த்தக வீதம் எதிர்மறையில் அதிகரித்துச் செல்லுகிறது. தற்போது ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமான பற்றாக்குறை (இடைவெளி) சுமார் —190 பில்லியன் டாலரை தொட்டுவிட்டது.

பெரும்தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டது போல, தற்போது இந்திய ஆளும் வர்க்கமானது ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும், உலக சந்தையில் போட்டி போடுகிற வகையில் உற்பத்தி பொருட்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என பலமாக பேசி வருகின்றன. ஆனாலும் ஒரே நாளில் இந்த மாற்றங்களுக்கு சாத்தியமே இல்லை என்பதே நமது முடிவு.

1947—1980கள் வரையிலும், அதற்குப் பின்பான நவதாராளமய கட்டத்திலும் தனது ஒட்டுண்ணித்தன, பாதுகாப்பான சந்தையில்

முதலீடு செய்கிற, நிதி முதலீடுகளுக்கும், உள்கட்டமைப்பிற்கும் அரசை சார்ந்துள்ள, அரசின் கண்காணிப்பிற்கு அப்பாற்பட்ட உதவாக்கரை வர்க்கமாகவே அதன் தோற்றம் தொட்டே இந்தியப் பெரு முதலாளிவர்க்கம் தொழில்படுகிறது.

இந்தியப் பெரு முதலாளியவர்க்கத்தின் இந்தப் பண்பானது இந்தியப் பொருளாதாரத்தை அழுகிப்போன, தேக்கம் பெற்ற, அரை தொழில்மய நாடாக அறுபதாண்டுகாலமாக வைத்துள்ளது. சமூகத்தின் சமச்சீரான வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்தது. இந்தியப் பெரு முதலாளிகள், அவர்களின் கூட்டாளிகள், பன்னாட்டு நிதி மூலதன ஊடுருவலால் பலன்பெற்ற சிறு மக்கள் திரளைத் தவிர பெரும்பாலான மக்கள் கிராமத்தில், துண்டித்த பிரிவினராக இருந்தனர்; இருக்கின்றனர்.

நகரத்தில் குவிமயப்பட்ட வளர்ச்சி, அதன் நுகர்வாளர்கள் ஒரு முனையிலும் கிராமத்தில் தொடருகிற பழைய பிற்போக்கு அம்சங்களின், உற்பத்தி உறவுகளின் எச்சங்கள் மறுமுனையிலும் என மிகவும் சமச்சீரற்ற பொருளாதார வளர்ச்சி நிலையில் இந் நாட்டை நிறுத்தியுள்ளனர்.

இந்த கும்பல்தான், தற்போது வெளிநாடுகளில் உள்ளது போல, ரொக்கப் பணப் பயன்பாடற்ற, கடன் அட்டை பரிவர்த்தனைக்கு இந்திய சமூகத்தை மாறக் கோருகிறது. அவ்வாறு மாறுவதற்கு மோடி அரசின் அறிவிப்பு துணை செய்கிறது எனக் கூசாமல் பேசுகிறது இந்திய தொழிலகக் கூட்டமைப்பு. இது எவ்வளவு பெரிய முரண்பாடு!

ஆக,நாட்டின் தொழில்மயத் துறையில்(Productive sectors) துணிந்து முதலீடு செய்யாத, புதிய துறைகளில் துணிந்து இறங்காத, நாட்டின் வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் உத்தரவாதம் வழங்காத ஒரு மந்த வர்க்கத்திடம் வழங்கிய கடனைப் பெறுவதில் முன்னாள் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜன் ஆர்வம் காட்டியது ஒன்றும் பெரிய வியப்பில்லை.

ராஜனைப் பொறுத்தவரை, இந்த உதவாக்கரை வர்க்கத் தால் வளர்ச்சியும் இல்லை, நன்மையும் இல்லை என்ற முடிவுக்கு சீக்கிரமாகவே வந்து விட்டதாக தெரிகிறது. மேற்குலக முதலாளிய வர்க்கப் பண்புகளை அதிகம் உள்வாங்கிய ராஜனுக்கு இந்திய முதலாளிய வர்க்கத்தின் இப்பண்புகள் ஏமாற்றம் அளித்தாலும், இந்திய சந்தையை மீட்க முயன்றார். நவதாரளமய சந்தை ஊடுருவலுக்கு ஏற்ற சந்தைக் கட்டமைப்பை, வாய்ப்புகளை உருவாக்க ஆர்வம் கொண்டார். பத்து பாரம்பரிய உதவாக்கரை




முதலாளிகளால், நாட்டின் பொருளாதாரம் பாதிப்படையாமல் இருக்க, ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு உகந்த சந்தையாக இந்தியாவை மாற்ற வங்கி சீர்திருத்தம் அவசியம் என உணர்ந்தார். வாராக் கடனை வசூலிக்கிற நடவடிக்கை எடுக்கத் தொடங்கினார். அவரின் முயற்சி பலிக்கவில்லை.

தற்போது, மக்களிடம் உள்ள பணத்தை உறிஞ்சுகிற ஆளும் வர்க்கத்தின் அயோக்கியத்தனம் தற்காலிகமாக வங்கிகளை மூச்சு விட வைக்கும் என்பது உண்மைதான். ஆனால், இதுமட்டுமே இந்தியப் பொருளாதாரத்தை, வங்கிகளை மீட்கிற இறுதி வழி எனக் கொள்ள முடியாது. சவாலே இனிதான் உள்ளது!

## 6. திசை மாறுகிற ஆட்ட விதிகள்

**2008**ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி, அதைத்தொடர்ந்து 2011—12இல் ஸ்பெயின், கிரீசில் ஏற்பட்ட நெருக்கடி தற்போது 2016இல் வளர்ந்துவருகிற நாடுகளான சீனா, இந்தியா மற்றும் பிரேசிலை சுற்றி சுருக்குக் கயிறாகச் சுற்றி வளைத்துள்ளது. நெருக்கடியின் முதல் சுற்றானது, வளர்ந்த தொழில்மய நாடுகளில் துவங்கி அதன் இரண்டாம் சுற்று எமர்ஜிங் எக்கனாமி என சொல்லப்படுகிற ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளை முகாமிட்டுள்ளது.

ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமானது 3.5 விழுக்காடு அளவிற்கு மந்தமாக உள்ள சூழலில், விலக்காக சீனாவும் இந்தியாவும் 7 விழுக்காடு அளவிற்கு வளர்ச்சி பெற்றுவருகிற நிலையில் நமது வாதம் முரண்பாடாகத் தெரிவது இயல்பே! இதை சற்று நெருங்கிப் பார்ப்போம்.

2008ஆம் ஆண்டுகால பொருளாதார நெருக் கடிக்கு முன்னர் அமெரிக்கப் பொருளாதாரம் இவ்வகையான அதிக வளர்ச்சி வீதத்திலேயே வளர்ந்து, திடுமென பாதாளத்தில் வீழ்ந்தன என்ற விவரத்தை கருத்தில் கொண்டால், பொருளாதார நெருக்கடிக்கு முந்தைய கட்டத்தில் (Pre-Crisis) வளர்ச்சிவீதம், செங்குத்தான ஏறு முகத்திலும், நெருக் கடிக்குப் பிந்தைய சூழலில் (Post Crisis) செங்குத்தான இறங்குமுகத்திலும் இருப்பதும்

தெளிவாகும். 2007ஆம் ஆண்டில் அமெரிக்க பொருளாதாரத்தின் GDP+3.6 விழுக்காடாக இருந்தது. ஆனால் அடுத்த சில மாதங்களிலேயே 2008ஆம் ஆண்டில் திடீரென 1.8 விழுக்காடாக சரிந்தன.

இன்னும் சரியாக சொல்வதென்றால் உடனடியான, வேகமான வளர்ச்சி வீதத்தைவிட நிதானமான, மிதமான, பொறுமையான வளர்ச்சி வீதத்தில், மட்டுமே ஆபத்தும் சவாலும் குறைவு. அதிக வளர்ச்சிவீதம் என்பது ஏதோ ஒரு புறக்காரணியால் வேகமாக முடிக்கிவிடப்பட்டிருக்கலாம். ஆனால் அது நீண்டகால வளர்ச்சிக்கு உதவாது. உதாரணமாக அமெரிக்காவில் வீட்டு மனை சந்தைமதிப்பு குறைய, அதன் மீதான முதலீடுகள் அதிகரித்தன. வங்கிகள் கடனை வாரி வழங்கின. இறுதியில் லே மென் வங்கி திவாலாக, அரசு வங்கியை மீட்கிற நிலைக்குத் தள்ளியது.

2008ஆம் ஆண்டுகால, பொருளாதார மந்த கட்டத்திற்கு பிந்தைய சூழலில், இந்தியாவில் வேறு விதமான பொருளாதாரப் பண்பு மாற்றங்கள் நிகழத் தொடங்கின. ஏகாதிபத்திய மூலதன ஊடுருவல், கடந்த பத்து ஆண்டுகளில் வேகமான அளவில் இந்தியாவில் அதிகரித்தன. மறுமுனையில், வளர்ந்து முதலாளிய நாடுகளின் சந்தையிலோ மற்ற ஆசிய சந்தையிலோ இந்திய மூலதனப் பரவல் அதிகரிக்கவில்லை. சுருங்கச் சொல்லின், இந்தியாவின் ஏற்றுமதி மூலதனத்தைவிட ஏகாதிபத்திய மூலதனத்தின் இறக்குமதி மூலதனம் அதிகரித்தன.

உள்நாட்டு பெரு முதலாளிகள் உலகச் சந்தையில் போட்டி போடுகிறவகையில் உற்பத்தி பொருட்களின் தரத்தை உயர்த்துவது, தொழில்துறையில் முதலீடு செய்வது குறித்து சிந்திக்காமல் உடனடி லாபம் வழங்குகிற உள்கட்டுமானத் துறையிலும் தொழில்துறை அல்லாத காப்பீடு, நிதி சேவைத் துறையிலும் அதிக முதலீடு செய்தனர். இந்த முதலீடுகளுக்கு அதிகளவில் இந்திய அரசு கடன் வழங்கியது. அதானியின் துறைமுக கட்டுமானம், ஜிவிகே நிறுவனத்தின் ஆற்றல் துறை முதலீடு, கட்டுமானத் துறை முதலீடு, ரிலையன்சு நிறுவனத்தின் தொலைத்தொடர்பு, சாலைகள், ஆற்றல், நிதி சேவை போன்ற துறைகளில் முதலீடு செய்தது.

கடன் வழங்கிய அளவிற்கு, வேலைவாய்ப்புகளோ, ஏற்றுமதியோ அதிகரிக்கக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. அதேநேரத்தில் இந்த வாராக் கடன் அளவு, இந்திய வங்கிகளின் திவால் நிலைக்கு இட்டுச்சென்றது.

இதன் காரணமாகவே, 2008ஆம் ஆண்டுக்கு பிந்தைய ஆண்டுகளில் மூலதன ஏற்றுமதியின் பரவலாக்கம் அதாவது நிதி மூலதனத்தை திறமையாக கையாளவேண்டும் என்ற அக்கறை பன்னாட்டு நிதியகத்திற்கு அதிகரித்தது. வளர்ந்து வருகிற நாடுகளின் வங்கிகளில் திரட்டப்பட்டுள்ள நிதி மூலதன இருப்பை கண்காணித்து ஒழுங்குபடுத்த ஆர்வம் செலுத்தியது. அதன் வெளிபாடுதான் Basel II மோற்றும் Basel III போன்ற IMF வழிகாட்டுதல்கள்.

ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்தின் மந்த போக்கினில், எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம் பன்னாட்டு நிதியகம் உணர்ந்தே உள்ளது.

தொகுத்துக் கூறின், தாராளமயக் கட்டத்தில், வளர்ந்த தொழில்மய நாடுகளின் நாடுகளின் உபரிநிதி மூலதனம், ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பாய்ந்து உழைப்பையும் இயற்கை வளத்தையும் சுரண்டிக் கொழுத்தது. தனது நிதி மூலதனத்தை பெருக்கிக் கொண்டது. மூன்றாம் உலக நாடுகளின் சந்தையும் உபரி மூலதனப் பெருக்கத்திற்கு ஆதரவாக இருந்தது.

1980களில் தொடங்கிய சுற்று 2016இல் அதன் அந்திமக் காலத்தை நெருங்கியுள்ளது. 90களில் பிரேசில், மெக்சிகோ, சிலி போன்ற நாடுகளில் முற்றிய பொருளாதார நெருக்கடிகள் தற்போது 2015—16இல் சீனாவையும், இந்தியாவையும் சுற்றி வளைத்துள்ளன. 2008 நெருக்கடியில் அமெரிக்கா சிக்கத் தவித்த போது,சீனாவின் சந்தையே அதன் மீட்சிக்கு பெரிதும் உதவியது. சீனாவின் குறைவான கூலி வீதம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தது, அதிவேக வளர்ச்சிப் பாதையில் சீனாவை செலுத்தியது. சீன அரசோ வங்கிகளின் ஊடாக கடன் செலாவணியை நிறுவனங்களுக்கு வாரி வழங்கின. இன்று அதன் கடன் அளவு பல மடங்கு பெருகியுள்ளது. தற்போது சீனாவோ, வெளிநாடுகளில் தேவை குறைந்ததை அடுத்து உள்நாட்டு நுகர்வை மையப்படுத்தி பொருளாதாரத்தை முடுக்கிவிட்டு வருகிறது. வளர்ந்த நாடுகளோ, இந்த நிலவுகிற பொருளாதார நெருக்கடிக்கு சீனவைக் காரணம் காட்டி வருகின்றன. சீனாவில் முற்றிய நெருக்கடி வெடித்தால், அது உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என உணர்ந்தே உள்ளன.

ஐரோப்பிய யூனியனில் இருந்து இங்கிலாந்தை அடுத்து இத்தாலியும், பிரான்சும்கூட வருகின்ற நாட்களில் விலகுகிற சூழ்நிலைகள் தென்படுகின்றன.

*இந்தியாவைப் பொறுத்தவரை, கடந்த எட்டு—பத்து ஆண்டுகளில் அதன் அந்நியக் கடன் வீதமானது அதன் வரலாற்றில் இல்லாத வகையில் 485 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. உள்நாட்டு பெரு முதலாளிகளிடம் தொக்கி நிற்கிற வாராக் கடன் மட்டுமே சுமார் 8 லட்சம் கோடி வங்கிக்கு வெளியே உள்ளது.*

*இந்த அறிவிப்பின்வழி, இந்தியப் பெருமுதலாளிகளை தற்காலிமாக மோசடி மோடி அரசு காத்துள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளில் வேலையில்லா பட்டாளம் நகரில் குவிய உள்ளது. ஏகாதிபத்திய மூலதன ஊடுருவல் இந்திய ரயில்வே துறை, மின்சாரத் துறை போன்ற பொதுத்துறை நிறுவனங்களை சூறையாடக் காத்து நிற்கின்றன. இந்தியப் பெரு முதலாளிய வர்க்கத்தின் ஒட்டுண்ணித் தனப் பண்பால் எதிர்கால சவாலை துணிந்து எதிர்கொள்ள வாய்ப்பில்லை. ஒரு சிக்கலைத் தீர்க்க முயன்று மேலதிக சிக்கலுக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. இந்திய அரசு, பொறிக்குள் சிக்கிய எலியாகியுள்ளது.*

# 7. என்ன செய்ய வேண்டும்?

பாகிஸ்தான் மீது சர்ஜிகல் ஸ்ட்ரைக்,போபால் சிறையி லிருந்து ஸ்பூனையும் தட்டையும் கொண்டு தப்பிய கைதிகள் மீதான போலி மோதல் படுகொலைகள் என சினிமாத் திரைக் கதைகளை மிஞ்சுகிற மோடி அரசின் மற்றொரு நாடகமான இந்த ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்பை தனது வளர்ச்சி மாதிரியைக்கொண்டும் இந்து தேசிய கலாச்சார அரசியல் மேலாதிக்கத்தின் ஊடாகவும் சரிக்கட்ட முயல்கிறது. அதில் தற்காலிக வெற்றியும் பெற்றுள்ளது.

ஒரே நாடு ஒரே வரிக்கொள்கை, ஒரே கல்விக் கொள்கை, மாநில அதிகாரங்களை பறிப்பது, நிதிமூலதனங்களை வங்கிகளில் மையப்படுத்துவது என பின்காலனிய இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத வேகத்தில் நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் பொருளியில் அதிகாரமும் மோடியின் பாஜக ஆட்சியில் பெரும்பான்மை பலத்துடன் மையப்படுத்தப்படுகிறது.

இந்தப் போக்கானது ஏகாதிபத்திய கட்டத்தை அப்பட்ட மாகவே வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதாவது, பெரு முதலாளிய வளர்ச்சிப் போக்கின் தவிர்க்கவே இயலாத தன்மை களின் குறிப்பான வெளிப்பாடாகும். இதன் தொடர்ச்சி யானது

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது அல்லது முழுவதும் தனியார்மயப்படுத்துவது, குறிப்பாக வங்கிகள், ரெயில்போக்குவரத்து, நீர் விநியோகம் என அரசின் வசமுள்ள அனைத்து நிறுவன அலகுகளும் முதலாளிய வர்க்கத்தின் கைகளில் வழங்கப்படும். சுகாதாரம், கல்விபோன்ற மக்கள் தேவைகளுக்கான அரசின் செலவுகள் கட்டுப்படுத்தப்படும். நிலவுகிற பெயரளவிலான பாராளுமன்ற ஜனநாயகமும் பறிக்கப்படும். போராடிப் பெற்ற தொழிலாளர்களின் உரிமைகள் நசுக்கப்படும். ஒடிசா, சத்தீஸ்கர், ஜார்கன்ட் போன்ற மாநிலங்களின் கனிமவளங்களை சூறையாடத் தடையாக நிற்கிற மாவோயிச அரசியல் சக்திகளை வேகமான வகையில் போலி மோதலில் அழித்தொழிக்கிற பணிகள் துரிதப்படுத்தப்படும். காடுகளில் இருந்து பலவந்தமாக பழங்குடிகள் வெளியேற்றப்படுவார்கள். எதிர்ப்புகளை கட்டுப்படுத்த இராணுவம், போலீஸ் துறைகள் நவீனமயப்படுத்தப்படும். இவையெல்லாம் சமூகப் பொருளியில் அரசியல் அரங்குகளில் ஏற்படவுள்ள அரசின் பண்பு மாற்றப் போக்குகள்.

கருத்தியல் தளத்தில், அரசின் சர்வாதிகாரப் போக்கை நியாயப் படுத்துகிற பொய், பித்தலாட்டங்கள் முழு பலத்துடன் பிரயோகிக்கப்படும். மேலதிகமாக உழைக்கும் வர்க்கத்தின் அணிசேர்க்கைக்கு தடையேற்படுத்துகிற வகையில் வகுப்புவாத அரசியல் தீவிரப்படுத்தப்படும்.

ஆக, ஏகாதிபத்திய சகாப்தத்தின் “**தாராளமய இந்துத்துவ சர்வாதிகார அரசு**” என்ற தனது முழு வடிவத்தை பாஜக வெளிப்படுத்துகிற பண்பு மாற்றத்தின் ஒரு கூறுதான் இந்த அறிவிப்பு.

கம்யூனிச தத்துவத்தில் புடம்போடப்பட்ட இத்தாலிய, ஜெர்மானிய தொழிலாளர்களையே மீறி நாசிசமும் பாசிசமும் தலைதூக்க முடிகிறதென்றால் நடுத்தர வர்க்கத்தின்மீது செல் வாக்கு செலுத்த முடிகிறதென்றால், அதன் நச்சு வீரியத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். இந்திய ஒன்றியத்தின் சிதறுண்டுள்ள தொழிலாளி வர்க்கம் மற்றும் அரசியலற்ற நடுத்தர வர்க்கங்களின் உதவியோடு ஆட்சிக்கு வந்துள்ள மோடி, மக்களின் பலவீனத்தை உணர்ந்துள்ள காரணத்தாலேயே பாகிஸ்தான் வெறுப்பரசியலின் பாற்பட்ட இந்து தேசிய வெறியூட்டல், பொது சிவில் சட்டம், சிமி கைதிகள் கொலை, சட்டீஸ்கார், ஜார்கண்டில் பெரு முதலாளிகளின் சுரண்டலுக்கு தடையாக நிற்கிற மாவோயிஸ்டுகளை வேட்டையாடி அழிப்பது போன்ற கொடூரங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இரண்டாம் உலகப் போரில் நாசிக்களை வீழ்த்தி உலகைக் காத்த கம்யூனிஸ்டுகளாலேயே காவி பயங்கரவாத இந்துத்துவ சக்திகளை வீழ்த்த முடியும்! அதானி, அம்பானியை காத்திட, அவர்களுக்கு பணத்தை வழங்கிட நாட்டையே கூறு போட்டு விற்கிற மோசடி மன்னன் மோடியின் மாய்மாலத்தை தோலுரிப்போம்! உழைக்கும் மக்களாக ஒன்றுபடுவோம்!

இன்று நம்முன் இரு வாய்ப்பு மட்டுமே உள்ளது. ஒன்று இந்த காட்டுமிராண்டித்தன அரசை ஏற்பது, இல்லையென்றால் இந்த அரசைத் தூக்கி எறிந்து சோசலிசத்தை நிறுவுவது.

**காட்டுமிராண்டித்தனமா? சோசலிசமா?**

■■■